மலர் 01
செப்டம்பர் - டிசம்பர்
2010

அறிவொளி பரவட்டும்

# வானவில்

වානවිල් VANAVIL




காலாண்டு
பல்சுவை
கதம்ப மலர்

வெளியீடு:

**மலையக கல்வி அபிவிருத்தி மன்றம்**

**කඳුරට අධ්‍යාපන සංවර්ධන සංගමය**

**UPCOUNTRY EDUCATION DEVELOPMENT SOCIETY**


With Best Compliments From:
SRILAK FERTILIZERS (PVT) LTD.
Srilak
Fertilizers (pvt) Ltd
125 Nagalagam Street, Colombo -14
Tel: 011 2981908, 4 921526 Facsimile: 011 2981908
Mobile: 0714 918876, 0777 343106
Email: srilakpohora@yahoo.com

# உள்ளே ...

நூலகம்


## சிறுகதை

வலியிழந்தவள்...
பூ மணம்...

## கவிதை

நண்பர்கள் ...
சாலச் சிறந்தது ...
அடுத்த தேர்தல் வரை....
துணிந்துவிட்டோம்....

## சிந்தனைத் துளி

மேலைநாட்டுச் சிந்தனை துளிகள் ....
சிந்தனைக்கு சில வரிகள் ...
ரஜனியின் சிந்தனை...
துன்பப்பட்டால் இன்பம் காணலாம்...
ஜெயலலிதா சொன்ன கதை ...
பேச்சு ...

## நேர்காணல்

கோ. சேனாதிராஜா

## தத்துவ மேதை

சோக்ரடீஸ்

## நகைச்சுவை

இப்படியும் சொல்லலாமே...
நகைச்சுவை பக்கம் ....

## கட்டுரை

மலையக கல்வி அபிவிருத்தி மன்றம் இதுவரை...
முடியும் என்பதே...
எதிர்காலமும் இப்படியா ...

## ஏனையவை

குறுக்கெழுத்து போட்டி....
தத்துவப் பாடல்கள்....
மன்றம் பற்றிய குறிப்புகள்....

## வானவில்

### காலாண்டு பல்சுவை கதம்ப மலர்

*நிறுவிய ஆசிரியர்*

**த. தனராஜ்**
தலைவர் ம.க.அ. மன்றம்
0777 950475

*துணை ஆசிரியர்கள்*

ஏ. எஸ். ஞானம்
செயலாளர் ம.க.அ. மன்றம்
0773 495630

எஸ். பி. போல்
இணை செயலாளர் ம.க.அ. மன்றம்
0779 445238

ஏனைய ஆக்கங்களும்
தொகுப்புகளும்
மலையக கல்வி அபிவிருத்தி
மன்றத்தின்
உறுப்பினர்கள்


*வடிவமைப்பு*

**கிராபிக் ஜீனியஸ்**
இல.58/81, ஆண்டிவால் வீதி,
கொழும்பு – 11.

**077 8 640 996, 075 5 041 118**

*அச்சுப்பதிப்பு*

**சபரிஸ் பிரின்டர்ஸ்**
இல. 150, ஜெம்பட்டா வீதி,
கொழும்பு - 13.
077 6069878, 077 6754257



அன்புக்குரிய வாசகர்களே !

மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்தின் குறுகியகால முயற்சியில் உருவான வானவில் சஞ்சிகையினூடாக உங்களை சந்திக்கின்றதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

மலையக கல்வி அபிவிருத்தி மன்றம், கலையை வளர்ப்பதையும் ஒரு நோக்கமாக கொண்டுள்ளது. அத்தோடு நம்மவர்களின் மத்தியில் வாசிப்புத்திறனையும் வளர்க்க வேண்டும் என்பதும் எமது ஆசையாகும். கண்டதையும் கற்றவன் பண்டிதன் ஆவான். என்ற வாக்குக்கேற்றவாறு, நாம் ஒவ்வொரு தடவையும் ஏதாவது ஒன்றை வாசிக்கும் போது ஒரு புதிய விடயத்தையாவது அறிந்து கொள்கின்றோம். தற்போதைய தொழில்நுட்பவளர்ச்சியால் நமது தமிழ் மொழியும் அழியும் நிலை ஏற்பட்டுள்ளது.

வாசிப்பவர்களின் தொகை அருகிவிட்டது. அனைவரின் கையிலும் கைபேசி. எந்நேரமும், தொலைக்காட்சி. அவைகள் தம்மை எங்கும் அசைய விடா வண்ணம் வசீகரித்து விடுகின்றது. நம் வீடுகளில் குடும்பத்துடன் ஒரு விடுமுறை நாளில் ஒன்று கூடும் போது கூட நமக்கு மத்தியில் பிரதானமாகிறது தொலைக்காட்சி. சில மணிநேரம் நாம் அதை நிறுத்திவிட்டு உறவினர்களிடம் கொஞ்சம் பேசிக்கொண்டிருக்கும் போது ஏற்படும் மகிழ்ச்சி தொலைந்துவிட்டுள்ளது.

அனைவரும் எழுத்துத் துறைக்குள் வர வேண்டும், எமது சஞ்சிகை அனைவரும் பயன் பெறும் வகையில் எம் மன்றத்தினரால் தயாரிக்கப்பட்டுள்ளது. அனைவரும் எங்களோடு இணைந்து சஞ்சிகையினை வளர ஒத்துழைக்க வேண்டும். உங்களின் சத்தான விமர்சனங்களை எங்களுக்கு தரவேண்டும். நீங்கள் வாசிப்பதோடு மட்டுமல்லாமல், போட்டி நிகழ்ச்சிகளில் பங்குப்பற்றியும் மக்கள் பயன் பெறும் ஆக்கங்களையும், சிறுகதை, கவிதை

போன்றவைகளை எமக்குத் தந்து எழுத்துத்துறைக்குள் புதியவர்கள் நுழையவேண்டுமென எதிர்பார்க்கின்றோம்.

ஒரு சிலரின் கருத்து நாங்கள் செய்யும் சில செயல்களை பார்த்து இவைகள் வீண் செலவுகள் என்றும் (உதாரணமாக நாட்காட்டி அச்சிட்டு வெளியிட்டபோதும் வாழ்த்துமடல்கள் அனுப்பும்போதும்) நாங்கள் எந்த விடயத்தையும் ஆரம்பிக்கும் போது இரண்டு பக்கமும் கொஞ்சம் யோசிப்போம்.

அதேபோல் இம்முறை நாட்காட்டி அச்சிட்டு நாங்கள் கொடுத்தபோது பல அங்கத்தவர்களை நேரடியாக சந்தித்து கலந்துரையாடினோம். புதியவர்கள் இணைந்து கொண்டார்கள். இந்த சஞ்சிகையையும் அதே நோக்கத்தோடு வெளியிடுகின்றோம். நாம் இச்சஞ்சிகைக்கு செலவாகும் தொகையோடு சிறு தொகையை சேர்த்து உங்களிடம் விற்கும் போது மன்றத்தின் பொருளாதார வளர்ச்சியும் வளரும். நாம் செய்யும் சேவைகளையும் அறிந்து கொள்வீர்கள் அதே போல் மேதின விழாவினை ஏற்பாடு செய்த போதும் இதனால் எமக்கு என்ன இலாபம் என்ற கேள்வி எழுந்தது. அதன் காரணமாக நாங்கள் விழாவினை எப்படியாவது நடாத்த வேண்டும் என்ற எண்ணத்தில் நிர்வாக குழுவினரின் செலவில் மாத்திரம் நடாத்த திட்டமிட்டோம். மேலும் சில நண்பர்களும் உதவினார்கள். முடிந்தளவு செலவுகளை குறைத்து சிறப்பான ஒரு விளையாட்டு விழாவினை நடாத்தினோம். நம் இளைஞர்கள் முதல் அனைவரும் எம்மை பாராட்டினார்கள். இதன் மூலம் நாங்கள் எதிர்பார்த்தது என்னவெனில்! மன்ற அங்கத்தவர்களை சேர்த்து கொள்வதாகும். இதில் நாங்கள் முழு வெற்றியைபெற்றுக் கொண்டோம். அனைவரும் இச்சஞ்சிகையை வாசியுங்கள். குறையை எங்களிடம் நேரடியாக கூறுங்கள். நிறைகளை வெளியில் சொல்லுங்கள். எங்களை உயர்த்த அது உதவியாக இருக்கும்.

நன்றி

ஆசிரியர் – வானவில்
த. தனராஜ்

" மலையக கல்வி அபிவிருத்தி மன்றம்." என்ற எமது நிறுவனம் கடந்த பல ஆண்டுகளாக ஏழை மாணவச் செல்வங்களின் கல்வியினை வளப்படுத்தி வெற்றியினை சுவைத்துக்கொண்டிருக்கும் வேளையில். எனது மன்ற தலைவன் தனராஜின் எண்ணத்தில் தோன்றியது தான் இந்த " வானவில் " புத்தகங்களில் மீது எப்போதும் காதல் கொண்டவன் என்பதாலும் நல்ல முயற்சி என்பதாலும் வாழ்த்துடன் கூடிய சம்மதத்தை தெரிவித்தேன்

எமது மன்றத்தினினுள் ஒழிந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணர அவர்களது ஆற்றல் மிகு கற்பனைக்கு முன்னுரிமை யளிக்கவும் வாசிப்பு திறனையும், சிந்தனை வளர்ச்சியையும், அதிகரிக்க " வானவில் " உதவும் என்று திடமாக நம்புகின்றேன். எதனையும் உணர்ந்து படிப்பவன் என்றும் வாழ்க்கையில் தோல்வியடைய மாட்டான். இந்த வாழ்த்துச் செய்தியில் ஒன்றை நினைவுகூற நினைககின்றேன்.

"நம் இளைஞர்களுக்கு என்ன ஆயிற்று பெரியவர்களிடம் மரியாதை கிடையாது. பெற்றோர் சொல்வதற்கு கீழ்படிவதில்லை. சட்ட திட்டங்களைப் பற்றியெல்லாம், கவலைப்படாமல் கன்னா பின்னாவென்று பேசி அநாகரிகமாக நடந்து கொள்ளுதல் ஒழுக்கம் என்பதே அவர்களிடம் இல்லாது போய்விட்டது. இவர்களுக்கு யார் நல்ல புத்தி சொல்வது ?

**"கிரேக்க தத்துவமேதை பிளேட்டோ"** இயந்திரத்தனம் எம்மை அறியாமலே எம்மையும், இயல்புவாழ்வையும் பாதித்திருக்கிறது. இத்தகு சூழ்நிலையில் எமது ஆற்றல்களை வளர்ப்பதே நாளைய போட்டிமிக்க சூழலில் ஜெயிக்க வழி!

**"வானவில்"** வெற்றியடைய நலன் விரும்பிகளின் ஆதரவு அவசியம் அது போல் ஆக்கங்களையும் கொடுத்துதவுங்கள்.

செ. மோகன்ராஜ்
பணிப்பாளர்
ம.க.அ.ம

## சிந்தனைக்கு சில வரிகள் ....

நல்ல சிந்தனை உள்ளவர்களுக்கு
அதைச் சொல்ல வாய்ப்பு கிடைப்பதில்லை,
நல்ல வாய்ப்பு உள்ளவர்களுக்கு
நல்ல சிந்தனை இருப்பதில்லை

- இன்று நாட்டுக்குத் தேவையானது அழுக்கேறிய கை விரல்களும், தூய்மையான உள்ளங்களும் தான்.

- மன்னிப்பு கேட்பது எதிர்காலத்தில் செய்யப்போகும் தவறுகளுக்கு அஸ்திவாரம் போடுவது போன்றது.

- நாம் ஆசைப்படுவது, நம்மிடம் இல்லையென்றால், நம்மிடம் இருப்பது மீது நாம் ஆசைப்பட வேண்டும்.

- செலவை விட வருமானம் அதிகம் உள்ளவன் - பணக்காரன்
- வருமானத்தை விட செலவு அதிகம் உள்ளவன் - ஏழை

- மிகப் பெரிய வாக்குறுதிகள் சந்தேகத்திற்குரியவை.

- சுறுசுறுப்பாக இருப்பவர்களுக்கு கண்ணீர் விட நேரமிருக்காது.

- ஞானிகளுடைய மூளையிலும் முட்டாள்தனமான ஒரு மூளை உண்டு.

- வயிற்றுப்பசியுடன் எவனும் தேசாபிமானியாக இருக்க முடியாது.

- இளமையில் செய்யும் சில காரியங்கள், முதுமையில் முகத்தை கருமையாக்கி விடும்.

தொகுப்பு:-
ஸ்ரீகாந்த்
நிர்வாகக்குழு
ம.க.அ.ம

# சிந்தனைக்கு சில வரிகள்...

- செயல்களை மட்டும்தான் நாம் புரிகிறோம், விளைவுகளை ஆண்டவன் தருகிறான்.

- ஒரு வியாபார நிறுவனம் விளம்பரம் செய்வது தேவையற்றது என்று நினைத்தால், விரைவில் அது தேவையற்ற நிறுவனமாகி விடும்.

- இறந்து போன மகான்களை பாராட்டுவதும், வாழ்ந்து கொண்டிருக்கும் மகான்களைச் சித்ரவதை செய்வதும் இன்றைய உலக இயல்பு.

- கெட்டவர்களிடம் ஒரு சில நல்ல குணங்கள் இருக்கும் . நல்லவர்களிடமும் ஒரு சில கெட்ட குணங்கள் இருக்கும். ஆகவே அடுத்தவர்களைப் பற்றி பேசாமல் இருப்பதே நமக்கு நல்லது.

- வரப்போகும் அபாயத்தைப் பற்றியே சிந்திப்பவன், அதை தற்போது இரண்டு மடங்காக அனுபவிப்பான்

- உன்னுடைய ரகசியங்களை நீ பாதுகாப்பது என்று எண்ணுவது விவேகம் மற்றவர்கள் அதை பாதுகாப்பார்கள் என்று எண்ணுவது முட்டாள் தனம்.

- உண்மை, தன்பக்கம் இருக்க வேண்டும் என்று எல்லோரும் நினைக்கின்றார்கள், ஆனால் உண்மையின் பக்கம் தாங்கள் இருக்க வேண்டும் என்று யாரும் நினைப்பதில்லை.

- சாவைக் கண்டு பயப்படுபவன், நல்லதொரு வாழ்க்கையைத் தொலைத்து விடுகிறான்.

- தன் அந்தஸ்துக்கு மேலான திருமணம் செய்து கொள்பவன் தன் சுதந்திரத்தை விற்கிறான்.

- ஏழை வயிற்றுக்கு உணவு கேட்கிறான்.
பணக்காரன் உணவுக்கு வயிறு கேட்கிறான்.

L. சிவச்செல்வம்
(முமணிச்செல்வம்)
மன்ற அமைப்பாளர்

# மேலை நாட்டு சிந்தனைகள்

1. சின்னச் சின்ன செலவுகளைக் குறித்து ஜாக்கிரதையாக இருங்கள். ஒரு சிறிய ஓட்டை ஒரு பெரிய கப்பலையே மூழ்கடித்து விடும்.

2. முதலாளியை அழித்து விடாதே ! எப்போது ஒரு ஏழை உனக்கு வேலை கொடுத்திருக்கிறான்?

3. ஒரு நல்ல மனிதனுடைய இதயம் தான் தெய்வத்தின் சரணாலயம்.

4. தாராள மனசு என்பது வாரி கொடுப்பதில் இல்லை. தேவையை புரிந்து கொண்டு. சரியான நேரத்தில் கொடுப்பதில் தான் இருக்கிறது.

5. கஷ்டத்தை அனுபவித்தால் தான் இரக்கம் என்பது பற்றி தெரிந்து கொள்ள முடியும்.

6. மனித இனம் யுத்தங்களுக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். இல்லையேல் யுத்தங்கள் மனித இனத்திற்கே ஒரு முடிவு கட்டி விடும்..

தொகுப்பு:-
A. நிக்கலஸ்
(என்டன்)
நிர்வாககுழு

S. மோகன்ராஜ் – பணிப்பாளர்

P. தவகுமார் – காப்பாளர்

T. தனராஜ் – தலைவர்

K. சிவசுப்பிரமணியம் – உப தலைவர்

A. சிவஞானம் (A.S. ஞானம்)– செயலாளர்

P. போல் – இணைச் செயலாளர்

P. இராகதாஸ் – பொருளாளர்

A. ஜோசப் – திட்டமிடல் முகாமையாளர்

L. சிவச்செல்வம், M. தேவராசன் – மன்ற அமைப்பாளர்

M. சிவகுமார், S. கோவிந்தராஜ் – விளையாட்டுத்துறை

R. பாலசுப்பிரமணியம், M. சண்முகராஜா, A. ஞானசேகரன் – மன்ற ஒருங்கிணைப்பாளர்

P. செல்வராஜ், T. சத்தியசீலன் – மன்ற வெளியுறவு அமைப்பாளர்

## செயற்பாட்டுக் குழுவினர்

| | |
|---|---|
| R. கிருபாகரன் | B. சுரேஸ்குமார் |
| R. சிவராஜன் | A. நிக்கலஸ் |
| S. சரவணகுமார் | S. ராஜபிரபு |
| P. ஶ்ரீகாந்த் | K. முத்துகுமார் |
| A. பாஸ்கரன் | V. சந்திரமோகன் |
| P. டெனிராஜா | K. சத்தியமூர்த்தி |
| K. ஶ்ரீகாந்த் | S. பரமராஜ் |
| S. சிவராஜன் | K. சுந்தரமூர்த்தி |
| S. நிர்மல் காந்த் | M. பிரதாபன் |
| A. பிரபாகரன் (J.P) | S. உத்தமராஜா |

# மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்தின் போஷகர்கள்

| | |
|---|---|
| திரு. என். சீனிவாசகம் | ( தேவி ஜுவலரி ) |
| திரு. என். ரெங்கராஜன் | (ரவி ஜுவலரி) |
| திரு. டி. நமசிவாயம் | ( சுபானி ஜுவலரி ) |
| திரு. ஆர். சீதாராமன் | ( பொபி ஜுவலரி ) |
| திரு. ஆர். எம். ராமஜெயம் | ( பொபி ஜுவலரி ) |
| திரு. ஆர். பாலசுப்பிரமணியம் | ( அருஜினா & சரிட்டா ஜுவலரி ) |
| திரு. ஆர். கிருஷ்ணசாமி | ( கிரவுண் ஜுவலரி ) |
| திரு. பி. ஜெயபாலன் J.P. | ( J.B. ஜுவலரி ) |
| திரு. பி.கே. பழனிசாமி | (அன்ன பூரணா ஹோட்டல் ) |

# சாவதேச அங்கீகாரம் பெற்ற
# SIP ABACUS & BRAIN GYM PROGRAMME
## 5 முதல் 13 வயது வரை

வாருங்கள் எங்களிடம் எங்களின் "அபகஸ்" மனக்கணித பயிற்சியின் மூலம் உங்கள் பிள்ளைகள் எல்லாப் பாடங்களிலும் அதிக திறமைசாலிகளாவதைக் காண்பீர்கள்

**இப்பயிற்சியின் மூலம் உங்கள் பிள்ளைகளுக்கு...............**

- நினைவாற்றல் சக்தி பெருகும்
- ஆக்கத்திறன் அதிகரிக்கும்
- சுறுசுறுப்பாக செயற்படும் நிலை ஏற்படும்
- வேகமாகவும் தெழிவாகவும் எழுதும் பயிற்சி ஏற்படும்


**இவையாவும் உங்கள் பிள்ளைகளிடம் காண விரும்புகிறீர்களா**

$1432 \div 4 + 356 \times 250 - 76 = ?$

உங்களால் இந்தக் கேள்விகளுக்கு
சில நொடிகளில் பதில் கூற முடியுமா?
ஆனால் .......
எங்கள் **SIP** நிறுவனத்தின் பயிலும் மாணவர்களால்
இதற்கு சில நொடிகளில் பதில் கூற முடியும்

5 முதல் 13 வயது சிறுவர்களின்
அறிவுத்திறனை அதிகமாக்கி அவர்களின்
திரமையை வெளிப்படுத்தும்

**2011 ஆம் ஆண்டுக்கான
ஆங்கில மொழிப்
பாலர் பாடசாலைக்கு
2 1/2, வயது முதல் 5 வயது
வரையிலான மாணவர்கள்
சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்**


தொடர்புகளுக்கு **SIP KIDS ACADEMY**
**176, St. Joseph Street, Colombo- 14.**
**Tel: 011- 3070660/ 0773 931688**
**(HNB க்கு அருகில்)**

# நண்பர்கள்

கடவுளும் சாத்தானும்
சந்தித்துக் கொண்ட ஒரு மாலை வேளை
கடவுள் கையில் பால் தம்ளர்,
சாத்தானிடம் சாராய போத்தல்
ஆரம்பித்தது சாத்தான்
" என்ன சாமி .எப்படி இருக்கீங்க.?
எங்க பார்த்தாலும் உங்க பேருதான் .
திருப்பதி, பழனி, திருத்தனின்று வசூலை
அள்ளி கொட்றீங்களே.

அட போப்பா.
அலுத்துக் கொண்டார் கடவுள்
என்ன இருந்தாலும்
சாராயக் கடை வருமானத்துக்கு
ஈடாகுமா நம்ம வருமானம்.
சாத்தான் விடுவதாயில்லை
" என்ன குருவே அப்படிச் சொல்லிட்டீங்க.
தேர், திருவிழா, கும்பாபிஷேகம்னு
உங்களுக்குத் தானே எல்லா கொண்டாட்டங்களும்.
நீதான் மெச்சிக்கனும்.எந்தப் பேப்பரை பாரு
உன்னோட ராஜ்ஜியம் தான்.
கள்ளக்காதல், கற்பழிப்பு , கொலை,
குண்டு வெடிப்புன்னு பூந்து விளையாடறயே தம்பி!"
சாத்தானுக்கு கூச்சமாக போய்விட்டது.
அதற்குள் பாலை காலி செய்து
விட்டிருந்தார் கடவுள்
என்ன சாமி அதுக்குள்ள முடிச்சிட்டீங்க.
வேணும்னா இதைக் கொஞ்சம் டேஸ்ட்
பண்ணிப் பாக்கறீங்களா ?
" ஒண்ணும் பண்ணாதில்ல .ஒண்ணும்
பண்ணாதுன்னா கொஞ்சூண்டு ஊத்து பார்ப்போம்."

*மது கடவுளை*
*மாத்திரமன்றி*
*மலையகத்தையும்*
*வசப்படுத்தியுள்ளது.*
*அதிலிருந்து*
*விடுபடும்*
*போது தான்*
*நாம்*
*உயர்வோம்.*

தொகுப்பு:
P. தவக்குமார்
( காப்பாளர் )
ம.க.அ.ம




மாலை நேரம் சூரியன் அப்போது தான் அஸ்தமனம் ஆகியிருந்தது. அந்த அஸ்தமன நேரத்தில் தான் முனியாண்டி வீட்டு லொட, லொட சுவர் உருலோசுவின் சிறிய முள்ளும் பெரிய முள்ளும் ஒருவரையொருவர் கட்டியணைத்து முத்தமிட்டுக் கொண்டு இருந்தது.

அந்த நேரம் மணி 5.27 ஆகும். இன்றும் சலங்கண்டி தோட்டத்து பீலி லயத்து முதல் காம்ராவில் மீனாட்சியின் கூக்குரல் பீலி லயத்தையே அதிர வைத்தது. முனியாண்டி இன்றும் குடித்து விட்டு மீனாட்சியை தன் மனம் போன போக்கில் அடித்து உதைத்துக் கொண்டு இருந்தான்

முனியாண்டி குடித்து விட்டான் என தெரிந்துக் கொண்டாளே சலங்கண்டி தோட்டத்து பீலி லயத்து மக்கள் மௌனம் காக்கத் தொடங்கி விடுவர்.

சலங்கண்டி தோட்டத்தில் லைசன் இல்லாத மினி சாராயக் கடைகள் நிறைய உள்ளன. அரசியல் அதிகாரம் உள்ள சிலரின் ஆசிர்வாதத்தோடு நடைபெறும் இச் சாராயக் கடைகளை தடுத்து மூடு விழா நடாத்த எவருமே முன் வருவதில்லை.

" அடியே எவடீ ஒனக்கு மீனாட்சின்னு பேரு வச்சான் ? மூதேசி . பேரு வச்சுருக்காங்க பேரு. மீனாட்சித்தாயே."

குடிபோதையில் முனியாண்டியின்சத்தம்கேட்டு கொகோப்பு உச்சிமலையில் இருந்து மலைப் பாறைகளுக்கு நடுவே கற்கண்டாய் பொங்கி வரும் ஊற்றுத் தண்ணீரும் தற்போது பயந்து நடுங்கியவாறு பீலியிலிருந்து வெளிவர மறுத்தது.

அடி , உதை, மிதி என குடிவெறியில் முனியாண்டி புரியும் அட்டகாசங்களை இதுவரை பொறுத்திருந்த மீனாட்சிக்கு அவளது மனதில் இன்று புதுவிதமான யோசனைத் தோன்றியது.

இனி இவன் தனக்கு தேவையே இல்லை என முடிவெடுத்தாள். "அடியே மீனாட்சி விடிஞ்சதும் ஸ்கூல்லு, ஸ்கூல்லுன்னு தெனமும் புள்ளைங்களை தொரத்துரயே, ஸ்கூல்லுல்ல படிச்சு கிழிக்கப் போகுது.

முக்காலி மாதிரி மூணு புள்ளைகள் பெத்து போட்டு இருக்க தறுதல புடுச்சவளே,.புள்ளைகளுக்கு படிப்பா வேணும்கிறது. படிப்பு குடிச்சிப்புட்டு ஆட பணம் இல்லாம தடுமாறுறேன். இதுகளுக்கு படிப்பு பெரிசாப் போச்சுது "

முனியாண்டியின் பேச்சுகள் மீனாட்சியை முள்ளாய் குத்தியது. அப்போது மீனாட்சிக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. அடக்கிக் கொண்டாள்.அடுப்பங்கரையில் கிடந்த கவ்வாத்துக் கத்தி மீனாட்சியின் பார்வையில் விழுந்தது. கவ்வாத்துக் கத்தியைஎடுத்துமுனியாண்டியின் தலையில் ஒரு போடு போடலாமா எனயோசித்தாள்.

அப்போது புலம்பிக் கொண்டிருந்த முனியாண்டி“அடியேநான்குடிச் சிருந்தாலும் சுய நெனவோடத் தாண்டி இருக்கேன் சவுக்கு மரம்மாதிரி நானு?

“ யோவ் வாயைப் பொத்தய்யா. அக்கம் பக்கத்துல்ல சனங்க இருக்காங்க வெட்கமாயில்ல ..... சே.... என்ன வாழ்க்கை இது. கூறு கெட்ட வாழ்க்கை ”

இன்றும் முனியாண்டியோடு மல்லுக்கட்டி தோற்றுப் போய்விட்டாள் மீனாட்சி .

ஸ்தோப்பில் கிடந்தசொரண்டியை எடுத்த முனியாண்டி கோபத்தோடு தாறுமாறாக மீனாட்சியை அடிக்க அவள் வலித்தாங்க இயலாது அப்படியே ஸ்தோப்பில் சுவரோடு சாய்ந்து ஒட்டிக் கொண்டாள்.

சிறிது நேரத்தில் நினைவு திரும்பிய மீனாட்சிகாம்பராவின் உள்ளே உலறிக் கொண்டு இருக்கும் முனியாண்டியின் குரல் கேட்டு மெதுவாக எழும்பி உள்ளே பார்வையைச் செலுத்தினாள்.

காம்பராவுக்குள் குப்பி லாம்பு முக்கி முக்கி எறிய கருமியாக வெளிச்சத்தைப் பரப்பிக் கொண்டு இருந்தது. சின்னஞ் சிறுசுகள் மூன்றும் விரல்களை வாயில் வைத்த நிலையில் வெறும் தரையில் உறங்கிக் கொண்டு இருந்தனர்.

“மீனாட்சி என்னைக் காப்பாத்து, இனி நான் தொந்தரவு தர மாட்டேன். சாராயம்னு நெனைச்சு கோசாவுக்கு தெளிக்கிற மருந்தை குடிச்சுப்புட்டேன். கண்ணு எல்லாம் இருட்டுது. ஒன்றுமே தெரியல்ல. என்ன கா... ப்.....பா.....த்.....து ”

முனியாண்டியின் வாயிலிருந்து வார்த்தைகள் அறுந்து அறுந்து விழுந்தன. நீ செத்துப் போ? நீ எனக்கு செய்த சித்திரவதைக்கு நீயே தண்டனையை தேடிக்கிட்ட

எனக்கும் புள்ளைகளுக்கும் நீ இனி தேவையே இல்லை. நீ எனக்கும், புள்ளைகளுக்கும் தேவை என்ற காலம் எப்போதோ செத்துப் போச்சு. மீனாட்சி சத்தமாக கத்தினாள் ஆத்திரத்தோடு.

விடிந்ததும் பீலி லயத்தில் முனியாண்டியின் சாதி சனங்கள் கூட்டமாக கூடி விட்டனர் . சிலர் எழவு பந்தல் போட காட்டு கம்புகளை கொண்டு வந்தனர். சாவு தப்பு சத்தம் கங்காணி லயம் வரை எட்டியது. லயத்து ஸ்தோப்பின் வலியிழந்தவளாக மூலையில் மீனாட்சி சாய்ந்திருந்தாள்.

சாதி சனங்கள் அனைவரும் மீனாட்சி அழாது இருப்பதைக் கண்டு திகைத்து நின்றனர். தாலி கட்டிய நாள் முதல் முனியாண்டி சாகும் வரை அவனிடமிருந்து பெற்ற அடி, உதை, மிதிகளின் வலியின் ஆழம் அவளுக்கு மட்டும்தானே தெரியும். எழவு வீட்டு கூட்டத்துக்கு தெரியுமா ?

(யாவும்கற்பனை )

கதை:- கே. பி. பி. புஸ்பராஜா

| | | |
|---|---|---|
| 01. செல்லதுரை மோகன்ராஜ் | - | கொழும்பு |
| 02. பிச்சை தவக்குமார் | - | யட்டியாந்தோட்டை |
| 03. தங்கவேல் தனராஜா | - | மாத்தளை |
| 04. பங்கிராஸ் போல் | - | பதுளை |
| 05. கோபாலசாமி சரவணராஜ் | - | மாத்தளை |
| 06. வேலு மோகன்ராஜ் | - | மாத்தளை |
| 07. வேலாயுதம் ஜெயகுமார் | - | ஹப்புத்தளை |
| 08. பொன்னையா பத்மநாதன் | - | மாத்தளை |
| 09. நாராயணன் தவகுமார் | - | புவக்பிட்டிய |
| 10. குணசேகரன் கிஷோகுமார் | - | புஸ்ஸல்லாவ |
| 11. சின்னமுத்து சிவசுப்பிரமணியம் | - | கொட்டாஞ்சேனை |
| 12. கருப்பையா சிவசுப்பிரமணியம் | - | இரத்தினபுரி |
| 13. குருசாமி கமலகிருஷ்ணன் | - | நாவலப்பிட்டிய |
| 14. ஆறுமுகம் ஞானசேகரன் | - | மாத்தளை |
| 15. முத்துசாமி தேவராசன் | - | மாத்தளை |
| 16. சன்னாசி சாந்தகுமார் | - | நோர்வூட் |
| 17. ராஜி குமார் | - | பண்டாரவளை |
| 18. செந்தமிழ் செல்வன் | - | ரஜவெல கெங்கல்ல |
| 19. இராமநாதன் ஹரிதாசன் | - | பதுளை |
| 20. வரதராஜ் பிரபாகரன் | - | பத்தனை |
| 21. பழனியாண்டி வடிவேல் | - | ஹட்டன் |
| 22. ஆனந்தன் யோகேஸ்வரன் | - | றொஸ்ஸல்ல |
| 23. யோகேஸ்வரன் அந்தோனி | - | டொலஸ்பாகை |
| 24. சின்னையா அருள்தேவன் | - | உக்குவளை |
| 25. எஸ் ரவிகுமார் | - | தலவாக்கலை |
| 26. இராஜேந்திரன் சங்கராச்சாரியர் | - | கொழும்பு - 13. |
| 27. மாரிமுத்து குணசீலன் | - | தெல்தோட்டை |
| 28. கோவிந்தன் கோபாலகிருஷ்ணன் | - | யட்டியாந்தோட்டை |
| 29. ஆர். சசிகுமார் | - | மாத்தளை |
| 30. கந்தசாமி ராஜவேல் | - | கொழும்பு - 15. |
| 31. பெருமாள் மகேந்திரன் | - | கொழும்பு - 11 |
| 32. சண்முகம் தினேஷ்குமார் | - | கொழும்பு |
| 33. இராமசாமி பால்ராஜ் | - | டிக்கோயா |
| 34. என் ஜெயரட்ணம் | - | நானுஓயா |
| 35. பரதயன் பத்மநாதன் | - | கொழும்பு |
| 36. செல்லத்தம்பி பிரபாகரன் | - | கம்பளை |
| 37. ஏ. திருச்செல்வம் | - | மாத்தளை |
| 38. ராமன் திருச்செல்வம் | - | ஹெவியகொட |
| 39. மாணிக்கம் ராமசாமி ஜனார்த்தனன் | - | பதுளை |
| 40. ஐயாதுரை விஜயேந்திரன் | - | நாவலபிட்டிய |
| 41. அருணாசலம்பிள்ளை கிரி | - | மஸ்கெலிய |
| 42. எல். ராமசுந்தரம் | - | புஸல்லாவ |
| 43. பெரியசாமி ரவிகுமார் | - | ஹப்புத்தளை |
| 44. துரைராஜ் கிருஷ்ணகுமார் | - | கந்தபொல |
| 45. பாலகிருஷ்ணன் சுரேஷ் | - | வட்டகொட |
| 46. ஜே. ஜெயசந்திரன் | - | கொழும்பு |
| 47. மாரியப்பன் சிவலிங்கம் | - | பன்வில |
| 48. எம். பிரகாஸ் | - | அவிசாவலை |
| 49. செல்லையா - சிவராஜா | - | பதுளை |
| 50. கோவிந்தராஜ் விஜயகுமார் | - | இரத்தினபுரி |

(அடுத்த மலரிலும் தொடரும்)

கிரீடம் இருப்பதான
கனவே
நெஞ்சை நிமிர்த்தி விடுகிறது

அதன் பிறகான நடையோ
எதிர்வரும் எவரையும்
வணங்கவைத்து விடுகிறது

வண்ணமயமற்ற உடலின்
கம்பீரம் கண்டு
ஏளனமாய் சிரித்தவர்களையும்
பார்வையின் கூர்மையும்
மனதின் விசாலமும்
மண்டியிடச் செய்துவிடுகிறது

முதுகின் பின்னால்
முரசறைந்து புறம் பேசுபவர்களும் கூட
பின்னாளில் புகழ் பாட
விரும்பிடும் வண்ணம்
நிகழ்ந்து கொண்டிருக்கிறதொரு
வரலாறு

எதற்கும் உபயோகமற்றவர்களென
உதறித்தள்ளி
கதவடைப்பவர்களும்
சிகப்பு கம்பளம் விரித்து
சாமரம் வீசி நிற்கும்
சம்பவங்களும் கூட பதிவாகிக் கொண்டே இருக்கிறது.

யாரையும்
எதற்கும் எப்பொழுதும்
புறக்கணித்து விடாதீர்கள்

கனவுகளோடு உலாவரும்
மகாராஜாக்களின் உலகம்
எப்போதுமே
சாலச் சிறந்ததாகவே இருக்கிறது.

Boox பிரியங்களின்
குப்பைத் தொட்டி
கவிஞர்:- குகை. மா. புகழேந்தி

தொகுப்பு:-
உஷாந்தினி மோகன்ராஜ்


Save Time & Save Money
Define
Design
Deliver
Graphics Genius
adgenius@ymail.com
In door & Out Door Advertising Solution For Your Business
WHO WE ARE ?
We believe in advertising !
we believe in its impact !
Graphic Genius is a group of energetic people who are full of passion about advertising
We are innovative and dedication into our jobs.
we believe in delivering our clients with something beyond their expectation.
உறுதியான வியாபாரத்திற்கு
தகுதியான விளம்பரங்கள்..
எங்களிடம் மட்டுமே!
விளம்பரமே உங்கள் வியாபாரத்தின் சாவி !
WHAT WE DO ?
Calenders
Graphic Deigning
Offset Printing
Logo Editing
Digital Printing
Banners & Stickers
DIGITAL QUICKCOLOR
Name Boards
Plastic Sign
CONTACT US
Graphic Genius
58/81, Andival Street, Colombo- 13.
Mob : 0774 - 962 204
: 0778 - 640 996
Define the Perfect Advertising

*எம்மோடு தொடர்புகளுக்கு :-*

**மலையக கல்வி அபிவிருத்தி மன்றம் அலுவலகங்கள்**
இல. 157/2, 157/3 , செட்டியார் தெரு கொழும்பு - 11.

தொ. பே : +94 11 2389050, 2424125,
தொலைநகல் / தொலைபேசி : 2388566

இல. 74, முதலாம் மாடி, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
தொ. பே : 0113 135 150

இணையத்தள முகவரி :
www.arivoli.org

ஈமெயில் முகவரி :
arivoliorg@gmail.com

Register No. G.A. 2341

இந்த வழக்கில் சம்பந்தமில்லாமல் அடிக்கடி தலையிடறியே...

நீ வாதியா ....? பிரதி வாதியா ....?

இரண்டும் இல்லை அரசியல் வாதி

ஒபரேசனை நினைச்சாலே பயமா இருக்கு டாக்டர்.

எனக்கும்தான் பயமா இருக்கு, ஆனா பயந்துக்கிட்டிருந்தா

என்ன காரியம் நடக்கும் சொல்லுங்க ?

ஏன் சேர் ! நான் காலையிலிருந்து உங்களை தொடர்ந்து

அறுத்துக்கிட்டிருக்கேன். நீங்களும் சிரிச்சுக்கிட்டே பொறுமையா

கேட்கிறீங்களே கைமாத்து ஏதாவது வாங்க வந்தீங்களா ?

ராத்திரி தூக்கம் வரலேன்னா ஒன்று, ரெண்டு மூன்றுன்று எண்ணச்

சொன்னேன். செய்திங்களா ?

பத்தாயிரம் வரை எண்ணினேன்,

அப்புறம் தூக்கம் வந்துச்சா ?

இல்லை விடிஞ்சிறிச்சு.

ஏம்பா டைவர் இது உன் சொந்த வாகனமா ?

ஆமா சேர். ஏன் கேட்கிறீங்க ?

சிக்னல்ல எல்லாம் நிறுத்தி, மெதுவா குண்டு குழியில போடாம

அழகா ஓட்றயே !

A. பாலகரன்
நிர்வாகக்குழு
ம-க-அ-ம

# நன்றி மறப்பது நன்றன்று

மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்திற்காக நிரந்தரமான ஒரு அலுவலகம் இதுவரை இல்லாமல் இருந்தது. அந்த குறைகளை தீர்ப்பதற்காக ம.க.அ.மன்ற போஷகரான - திரு. ஜெயபாலன் அவர்களால் அவரின் நிறுவனத்தின் மேல் மாடியில் ஒரு பகுதியை நாங்கள் இயங்குவதற்காக காரியாலயம் ஒன்றை வழங்கி உள்ளார். அது மாத்திரமன்றி அவர் தலைமை வகிக்கும் அரிமா சங்கத்தினூடாக எமக்காக கணினி ஒன்றையும் தந்துதவியுள்ளார். எமக்கு கிடைத்த இந்த உதவிகளுக்கு காரணம் எமது சீரான சிறந்த தேவைகளாகும். எமக்கு இந்த பேருதவி களைத் தந்த திரு. ( J.B ) ஜெயபாலன் அவர்களுக்கும் நாம் இன்று நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

நன்றி

**மலையக கல்வி அபிவிருத்தி மன்றம்**



ஏனைய எழுத்தாளர்களின் வளர்ச்சிக்காக அவர்களின் சொந்த நூல்கள் 10 இற்கு வேட்டப்பட்டவைகளை வெளியீட்டு விழாக்களாக வெளியிட்ட பெருமை பெற்றவர்.

**கோ**விந்தராஜா.சேனாதிராஜா 25 வருட கால மலையக சிறுகதை எழுத்தாளர், சிறந்த சமூக சேவகர், சிறந்த சட்டத்தரணி, கலை இலக்கியவாதி இவரின் நேர்காணலுக்காக பல நாட்கள் தொடர்பு கொண்டு ஒரு மாதிரியாக எங்களுக்காக சில மணி நேரங்களை ஒதுக்கித் தந்தார். எப்போதுமே சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் அவர் நாங்கள் சென்ற போது கூட அவரின் இல்லத்தில் சட்டம் சம்பந்தமாக ஒருவர் எமக்கு முன்பே வந்திருந்து பேச்சு நடத்தி கொண்டிருந்தார். எங்களை வரவேற்று உட்கார வைத்து வெகு சீக்கிரமாக அவரின் வேலையை முடித்து விட்டு எங்களிடம் வந்து பேச ஆரம்பித்தார்.,

**சேனாதிராஜா அவர்களே! உங்களின் பெயர் தெரியும். உங்கள் பிறந்த ஊர் எது? உங்களின் தாய், தந்தை பெயர்களையும் அறிந்து கொள்ளலாமா?**

சேனாதிராஜா:-
நான் பிறந்தது தோட்டம்தான். ஏன் வெட்கப்பட வேண்டும். ரோபேரிதோட்டம் , மடுல்சீமை பஸ்ஸரை. என் அப்பா பெயர் கோவிந்தராஜா அம்மா பெயர் அன்னலெட்சுமி.

**நீங்கள் படித்த பாடசாலை, பட்டப் படிப்பு பற்றி ?**

சேனாதிராஜா பதுளை சரஸ்வதி தேசியக் கல்லூரியிலும் பட்டப் படிப்பு கொழும்பு - பல்கலைகழகம் பேராதெனிய பல்கலை கழகம் மற்றும் கட்டக் கல்லூரி.

**தற்போது நீங்கள் வகிக்கும் பதவிகளைப்பற்றி தெரிந்து கொள்ளலாமா?**

சேனாதிராஜா:
முதலில் எமது மன்றமான ம.க.அ. மன்றத்திற்கு ஆரம்பகாலம் தொட்டு ஆலோசகராக இருக்கின்றேன். அடுத்து மலையக பட்டதாரிகள் சங்க ஆலோசகராகவும், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைகழக பேரவை உறுப்பினராகவும், அகில இலங்கை சமாதான நீதவான். கடந்தபதினைந்துவருடத்திற்கு மேலாக இ.தெ.கா வின் சட்ட ஆலோசகராகவும், கடமை புரிகின்றேன்.

**உங்களின் பாடசாலை வாழ்க்கை, உங்கள் வாழ்க்கையின் சாதனைகள் பற்றி அறிந்து கொள்ளலாமா?**

சேனாதிராஜா : நான் 6ஆம் வகுப்பில் படிக்கும் போதே “மாணிக்கம்” என்கின்ற சஞ்சிகை (கையெழுத்துப்) பிரதிகள் (1 - 10 வரை தொடர்ந்து சென்றது. ) வெளியிட்டமை. அத்துடன் இந்து சமய போட்டிகளிலும், நாடக போட்டிகளிலும் இலக்கிய போட்டிகளிலும் பாரதி விழா பலவற்றிலும் பங்கு பற்றியும் பல தடவை பரிசில்களும் பெற்றுள்ளேன். அத்தோடு விளையாட்டுக்களிலும் பங்குபற்றி இருக்கின்றேன். ஹொக்கி, கிரிக்கட், கால்பந்து ஆகியவற்றிலும் தலைவராகவும் திகழ்ந்திருக்கின்றேன். சாதனைகள் என்று சொல்லும் போது 1991 ஆம் ஆண்டு பாடசாலையில் ஊவா மாகாண சிறுகதைப் போட்டியில் ஒரே நேரத்தில் 150 மாணவர்கள் பங்கு பற்றிய இப்போட்டிகக்கு ஒரு மாணவருக்கு 3 மணி நேரம் வழங்கப்பட்டது.

நான் 1/2 மணி நேரத்திலேயே உடனே மனதில் தோன்றிய சிறுகதையை எழுதி முடித்து முதல் பரிசு பெற்று சாதனை படைத்தது மட்டுமல்லாமல் நான் மட்டுமே தெரிவு செய்யப்பட்டேன். 2 ஆம் 3 ஆம் பரிசுக்கு அங்கு இடமில்லாமல் முதலாம் பரிசு மட்டுமே வழங்கப்பட்டது. அதே போல் 1982ம் ஆண்டு பதுளை சரஸ்வதி மத்திய கல்லூரியில்பி.வேதாந்தமூர்த்தி அவர்கள் அதிபராக இருந்த கால கட்டத்தில் நான் 7 நாடகத்திற்கு கதை, வசனம், எழுதி இயக்கத்திற்கு உரியவராக மட்டுமல்லாமல் நாடகத்தில் நடித்தும், சிவராத்திரி விழாவை நடாத்தியமைஅசுரசாதனையாகும்.

1983ம் ஆண்டு இனக்கலவரத்திற்கு பின்பு A/L பார்ட்சை முடிவுகள் வெளியாகின அக்காலத்தல் ஊவா மாகாணத்தில் இருந்து கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்திற்கு தெரிவான முதலாவது மாணவன் என்கிறதும் சாதனையே.

அத்தோடு 1991 - 1994 வரை இந்து கலாச்சார அமைச்சில் இணைப்பு அதிகாரியாக பணியாற்றியமை அக்காலத்தில் கல்வியில் திறமை காட்டும் இந்து பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில் வழங்கு வதற்கும் அறநெறிபாடசாலைஆரம்பிப்பதற்கும் முக்கிய கர்த்தாவாக நானும் விளங்கியமை.

இதுவரை சுமார்25 மாணவர்களுக்கு மேல் புலமைப்பரிசில் வழங்குவதோடு மட்டுமல்லாமல் மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்தின் ஆரம்ப காலம் தொட்டு பிரதான ஆலோசகராக தொடர்ந்து ஆலோசனை வழங்கி வருகின்றேன்.

மேலும் பதுளை ஊவா மாகாணத்தில்தேசியபல்கலைகழகம் அமைவதற்காக கோரிக்கை எழுந்தபோது பதுளை பிரதேசத்தில் தான் அமைய வேண்டும் என ஆணித்தரமாக குரல் கொடுத்தவன். இவ்விடயமாக பல்கலைகழக மானியங்கள் ஆணைக் குழுவிற்கு கருத்துரைகள் வாங்கியதும் பல்கலைக்கழகம் அவசியம் குறித்து பல கட்டுரைகள் புதினப் பத்திரிகைகளில் எழுதியவை போன்றவையும் சிலசாதனைகளாகும்.

**நீங்கள் கல்வி கற்கும் காலகட்டத்தில் எதிர்கொண்ட பிரச்சனைகள் எவ்வாறாக இருந்தன?**



*சந்திப்பு :–*
*A.S. ஞானம்*

சேனாதிராஜா:எல்லோருக்கும் போல் பொருளாதாரப் பிரச்சனை முதலிடம். நூல்கள் வாங்க முடியாமல் போனமை, ஆசிரியர் பற்றாக்குறை, வளங்கள் போதாமை கற்றவர்கள் அயலில் இல்லாத சூழல். பயிற்சி புத்தகங்கள் மாலை நேர வகுப்புகள் இல்லாமை.

**தற்போதைய மலையகத்தில் படித்து பெறுமை தரும் அந்தஸ்து பெற்றவர்கள் பற்றி ?**

சேனாதிராஜா:- மலையகத்தில் கிட்டத்தட்ட 120 சட்டத் தரணிகள், நீதவான்கள் 2 பேர், பொறியியலாளர்கள் சுமார் 200 பேர், வைத்தியர்கள் சுமார் 200 பேர், விரிவுரையாயர்கள் சுமார் 500 பேரும் எல்லா பட்டதாரிகளும் சுமார் 3000 பேர் வரை இருக்கின்றார்கள்.

குறிப்பு:- (மலையக பட்டதாரிகள் சங்க தேர்தல் காலங்களில் அல்லது ஒன்று கூடல் தினங்களில் 25 பேர் கூட சமூகம் தருவது குதிரை கொம்பு)

**நீங்கள் சந்தித்த வழக்குகளில் மறக்க முடியாதவை ஒன்றை சொல்லுங்கள்?**

சேனாதிராஜா :- கட்டாயமாக கூற வேண்டிய ஒரு வழக்கு பசறை தோட்டத்தில் முகாமைத்து வத்துக்கும், தோட்ட மக்களுக்கும் ஏற்பட்ட முறுகல் நிலையை தொடர்ந்து துரை பங்களாவும் வாகனங்களும் சேதமாக்கப்பட்டது.

அவர்களை பாதுகாக்க வந்த காவல் துறையினரின் வாகனமும் சேதமாக்கப்பட்டது இது தொடர்பில் 80 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பொது சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தது தொடர்பான சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்கள் . அவர்களுக்காக பல சட்டத்தரணிகள் வாதாடியும் விடுதலை பெற்றுத் தர இயலாமல் போனது.

அந்த நேரத்தில் அமைச்சராக இருந்து மறைந்த திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் பணிப்புரைக்கமைய பதுளை உயர் நீதி மன்றம் சென்றுவாதாடிஅனைவருக்கும் விடுதலை பெற்று கொடுத்த வழக்கு எனக்கு மறக்க முடியாததாகும்.

**உங்களின் எழுத்துத் துறை பற்றி அறிந்துகொள்ளலாமா ?**

சேனாதிராஜா:- நான் இதுவரைக்கும் மலையக சமூகம் தொடர்பான சுமார் 100 இற்கு மேற்பட்ட கட்டுரைகள் எழுதியுள்ளேன்.



ஏறத்தாழ இலங்கையில் வெளிவரும் எல்லா புதினப் பத்திரிகைகளிலும் வெளி வந்துள்ளன. சிறுகதைகள் சுமார் 25 வெளிவந்துள்ளன.

**இதுவரையில் நீங்கள் எழுத்துத் துறையில் சாதித்தவை,ஏனையகலைஞர் களின் வளர்ச்சிக்காக ஏதும் விசேடமாகசெய்துள்ளீர்களா ?**

சேனாதிராஜா:-

நான் ஏனைய எழுத்தாளர்களின் வளர்ச்சிக் காக அவர்களின் சொந்த நூல்களை(10இற்குமேற்பட்ட வை) வெளியிடுவதற்கு வெளியீட்டு விழாவாக நடாத்தியுள்ளேன்.

எழுத்தாளர்களை ஊக்குவிற்கு முகமாக 1993 ஆம் ஆண்டு மாத்தளை கார்த்திகேசுவின்"வழிபிறந்தது " புத்தக வெளியிட்டிற்கான அழைப்பிதழை வழமைக்கு மாறாக 100 இற்கு மேற்பட்ட சிறப்பு பிரதிகள் பெறுபவர்களின் பெயர்களை அச்சிட்டு அவர்கள் அனைவரையும் வரவழைத்து விழாவினை மிக சிறப்பாக நடாத்தியதுடன் குறித்த எழுத்தாளருக்கு பெரிய தொகை பணத்தை(செலவுகள் போக வழங்கியமை ) இலக்கிய வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்க வேண்டிய சந்தர்ப்பம்.

இந்த வெற்றியின் காரணமாகவே இன்றும் நடைபெறுகின்ற நூல் வெளியீட்டு விழாக்களில் சிறப்பு பிரதிகள் பெறும் அன்பர்களின் நீண்ட பெயர் வரிசை அச்சடிக்கப்படு கின்றமை. ஆச்சரியரியமான தொன்றல்ல. வெகு விரைவில்

**"புதுசா ஒரு தொர" "குதிரைகளும் பறக்கும்"** எனும் இரண்டு சிறுகதை தொகுப்புகளும் மலை நாட்டு எழுத்தாளர் மன்றம் சார்பாகவும், ம.க.அ.ம சார்பாகவும் வெளிவர இருப்பது முக்கியமான அம்சமாகும். )

**நாங்கள் எந்த விடயத்திலும் அரசியலை மன்றத்திற்குள் நுழைப்பது கிடையாது. ஆனால் உங்களை போன்ற மலையக சமூகத்திற்கு சிறப்பான எதிர்காலத்தை உருவாக்க காத்திருக்கும் உங்களிடம் ஒரு கேள்வி**

**மலையகத்தில் எதிர்கால அரசியல், கல்வி பற்றி உங்களின் கருத்து ?**

சேனாதிராஜா :- தற்போது நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் மலையக தமிழ் பிரதிநிதித்துவம் கனிசமான அளவு குறைந்துள்ளது. குறிப்பாக ஊவா மாகாணத்தில்

ஒருபிரதிநிதியேனும்தெரிவாகவில்லை இம்மாகாணத்தில் சுமார் 120,000 தமிழ் வாக்காளர்கள் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மலையக அரசியல் கட்சிகளின் போட்டி, பொறாமை, உட்பூசல் என்பனவே பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படாமைக்கு ஒரே காரணம். தகுந்த தருணத்தில் சரியான முடிவை எடுக்க கூடிய தலைவர்கள் இன்னும் எம்மத்தியில் உருவாகவில்லை. என்பதே உண்மை. மேலும் மலையகபட்டதாரி இளைஞர்கள் அரசியலில் பங்குபற்றாமையும் ஒதுக்கிவைக்கப்படும் மனப்பான்மையும் மாற்றமடைய வேண்டும்.

அரசியல் வாதிகளின் வேதவாக்காக தொழிலாளர்களின் சுகவாழ்வும், கல்வியுமே தம் இரு கண்களாக உணர தலைபட வேண்டும். முடிவாக தேர்தல் காலங்களில் சரி கட்சிகள் ஒன்றினைந்து மலையக தேசியத்தை முன்னெடுத்துச் செல்லுதல் அவசியமானதொன்றாகும். படித்த இளைஞர்கள், தொழில் வல்லுனர்கள், மலையகத்தை முன்னிலைப்படுத்தி தங்கள் வாழ்க்கையை முன்னிலைப்படுத்தி அமைத்துக் கொள்ளுதல்.

தங்கள்சமூக மேம்பாட்டுக்காக தங்களின் நெஞ்சில் ஒரு பகுதியையேனும் நினைவில் வைத்துக் கொள்ளுதல் மிகப் பெரிய நல்வினைத் தரும். எதிர்காலத்தில் மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றம் மலையக சமூகம் உயர பாரிய பங்கு வகிக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு ஏராளமாக கல்விமான்கள் மன்றத்துடன் இணைந்து கொள்ளுவார்கள். இதன் மூலம் சிறப்பான வழி காட்டலை மன்றத்தை மலையகம் பெறும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.


சந்திப்பு :-
A.S. ஞானம்

- நன்றி-

வாழ்த்துக்கள்

# தத்துவப் பாடல்

| பாடல் வரிகள் | படம் | பாடியவர் |
|---|---|---|
| கண்ணதாசன் | ஆண்டவன் கட்டளை | டி. எம். சௌந்தரராஜன் |

ஆ. ஆறுமனமே ஆறு அந்த ஆண்டவன் கட்டளை ஆறு (ஆறு)
சேர்ந்த மனிதன் வாழும் வகைக்கு தெய்வத்தின் கட்டளை ஆறு


தெய்வத்தின் கட்டளை ஆறு

ஆ. ஒன்றே சொல்வார் ஒன்றே சொல்வார் உள்ளத்தில் உள்ளது அமைதி
இன்பத்தில் துன்பம் துன்பத்தில் இன்பம் இறைவன் வகுத்த நியதி
சொல்லுக்கு செய்கை பொன்னாகும்
வரும் ... துன்பத்தில் இன்பம் பட்டாகும்
இந்த இரண்டு கட்டளை அறிந்த மனதில்
எல்லா நன்மையும் உண்டாகும் (ஆறு)

ஆ. உண்மையைச் சொல்லி நன்மையைச் செய்தால்
உலகம் உன்னிடம் மயங்கும்
நிலை உயரும் போது பணிவு கொண்டால் உயிர்கள் உன்னை வணங்கும்
உண்மை என்பது அன்பாகும் பெரும்
பணிவு என்பது பண்பாகும் இந்த
நான்கு கட்டளை அறிந்த மனதில்
எல்லா நன்மையும் உண்டாகும். (ஆறு)

ஆ. ஆசை, கோபம், களவு, கொள்பவன் பேசத்தெரிந்த மிருகம்
அன்பு, நன்றி, கருணை, கொண்டவன் மனித வடிவில் தெய்வம்
இதில் மிருகம் என்பது கள்ள மனம்
உயர் தெய்வம் என்பது பிள்ளை மனம்
இந்த ஆறு கட்டளை அறிந்த மனது
ஆண்டவன் வாழும் வெள்ளை மனம் (ஆறு)

# ஜெயலலிதா சொன்ன கதை




பாவம் செய்த ஒருவன் நரகத்துக்கு அனுப்பப்பட்டான். நரகப்பள்ளத்தாக்கில் அவன் நடந்துக் கொண்டிருந்த போது பாதையில் ஒரு சிலந்திப்பூச்சி இருந்ததை பார்த்து அதை மிதிக்காமல் கவனமாகச் சென்றான்.

பிற உயிரைக் கொள்ளாமல் இருந்ததற்காக அவன் கணக்கில் கொஞ்சம் புண்ணியம் சேர்ந்தது. உடனே அந்த புண்ணியத்திற்கான பயனும் கிடைத்தது. நரகத்தில் இருந்து மேலே வருமாறு அவனை அழைத்தார்.

எப்படி மேலே ஏறி வருவது?" என்று அவன் கேட்டான் " இதோ தொங்குகிறதுபார். சிலந்தி இழை இதைப் பிடித்துக் கொண்டு மேலே ஏறி வா" என்று சொன்னார்கள்.

அவனுக்கோ அவநம்பிக்கை இவ்வளவு மெல்லிசாக இருக்கும் இந்தச் சிலந்தி இழை நம்மைத் தாங்குமா? கையால் தொட்டதும் அறுந்து போகுமே ! இதில் நாம் எப்படி மேலே ஏறிச் செல்வது ? என்று யோசிக்கத் தொடங்கினான்.

தொகுப்பு:-
P. செல்வராஜ்
வெளியுறவு அமைப்பாளர்
ம.க.அ.ம



அவன் தயக்கத்தைப் பார்த்து மேலே இருந்தவர்கள் தைரியமாக வா ! இழை அறுந்து விடாது ! என்று சொன்னார்கள். அவனும் சிலந்தி இழையைப் பிடித்து மேலே பாதிவரை ஏறிவிட்டான் அப்பொது திடீரென்று கீழே பார்த்தான். அவனைப் போலவே பலபேர் சிலந்தி இழையை பிடித்து வந்துக்கொண்டிருந்தார்கள். அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. புண்ணியம் செய்தது நான் ! பலனைப் பெற வேண்டியது நான் ! இவர்கள் எல்லோரும் மேலே வரப்பார்க்கிறார்களே?

என்று கோபித்து கீழே இருந்தவர்களை காலால் எட்டி உதைத்தான். எல்லோரும் கீழே விழுந்தார்கள். அவனும்கூட திரும்பவும். நரகத்துக்குள் விழுந்து விட்டான். என்ன காரணம்? எப்போது அவன் பொறாமைப்பட்டானோ எப்போது தன்னலத்தால் மற்றவர்களை எட்டி உதைத்துக் கீழே தள்ளினானோ அப்போதே சிலந்திவலையும் அறுந்து விழுந்தது. தன்னலக்காரர்களுக்குப் பொறாமை அதிகம். என்பதை இக்கதை கூறுகிறது.



## Service Extenders for:

**Air Line Ticketing,**
**Inbound & Outbound Tours**
**Hotel Accommodation,**
**Transport**
**and**
**Visa Assistance.**



**For a Reliable & Affordable**
**Service Contact us.**

With Best Compliments From :

# UNIVERSAL CITY (PVT) LTD.


F41 & 42, UG 81, People's Park Shopping Complex,
Colombo- 11. Sri Lanka. Hotline: 077 58 644 76
Phone: 011 - 2437427, 011 - 2334621, Fax: 011 - 2470672
E-mail: universal@universalucgucl.com
Website: www.universalucgucl.com

IATA

# மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றத்தின் மேதின விளையாட்டு விழா நிகழ்வுகள் 2010













# மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்தின் மேதின விளையாட்டு விழா நிகழ்வுகள்

# 2010














விளையாட்டுத்துறை
பொருப்பாளர்கள்
M. சிவகுமார்
S. கோவிந்தராஜ்
ம.க.அ.ம

இந்த வருடம்
முதற் தடவை என்பதால் எங்களால்
சரியாக செய்வதற்கு சிரமப்பட்டோம்
பல அங்கத்தவர்கள் விளையாட்டுக்களில்
பங்குபற்றவில்லையென
குறைபற்று கொண்டார்கள்.
ஆகவே எமது அடுத்தவர்களுக்கு
மேதின விழாவில் மன்ற அங்கத்தவர்கள்
விளையாட்டுக்களில் முதலிடம் வழங்கப்படும்.

*With Best Complements from*



# Kent Sports Club

Colombo 11

Tel: 0777 417068,

E-mail: kentlb@gmail.com / prabah11@gmail.com

# முடியும் என்பதே நம்பிக்கையின் ஆரம்பம்

முடியும் என்பதே நம்பிக்கையின் ஆரம்பம் இந்த நம்பிக்கையின் பயன் நான்கு வருடத்தினை பூர்த்தி செய்த மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்திற்கு கிடைத்துள்ளதாகவே நாம் கருதுகின்றோம்.

எம் மன்றம் வளர்வதற்காக எம்மவர் தந்த 200 ரூபா சந்தாபணம் எம்மவர் மத்தியில் இரண்டு லட்சம் ரூபா பணம் கொடுக்க வேண்டும். என்று எண்ணி அதையும் மன்றத்தின் வளர்ச்சிக்காக கொடுத்து உதவி செய்ய முன் வந்தவர். எமது செட்டியார் தெருவிலே இருப்பதையிட்டு மன்றம் இன்னும் ஒரு படி பெருமை கொள்கின்றது.

எம்மவர்களுக்காக மேலும் மேலும் என்ன தேவை, என்ன தேவை என்று கேட்டு உதவிகள் செய்ய முன் வருகின்றவர்களுக்கு எம் மன்றம் ஒரு முறை அல்ல ஓர் ஆயிரம் முறை நன்றி சொல்லக்கடமைப் பட்டுள்ளது.

மலையக கல்வி அபிவிருத்தி மன்றம் வீனாக ஒரு ரூபாய் செலவழித்தாலும் அதன் வலி , 200/= ரூபாய் சந்தா கட்டும் ஒவ்வொருவருக்கும் நிறையவே உண்டு.

விளம்பரத்திற்காக நாம் 500/= ரூபா செலவழித்தாலும் ஏன் அந்த பணத்தில் 10 அப்பியாச கொப்பிகளை வாங்கி இருக்கலாமே.

என எம்மிடம் கேள்வி கேட்பவர்களும் உண்டு. அவர்களுக்காக நாம் ஒன்றை சொல்லிக்கொள்ள விரும்புகின்றோம். விளம்பரம் மூலம் நிறைய அங்கத்தவர்கள் எம்முடன் இணைந்துள்ளார்கள். இப்போது எமது அங்கத்தவர்களின் எண்ணிக்கை **600 அங்கத்தவர்களை** கடந்து நிற்கின்றது.

பத்திரிகை மூலம் எம்மைப் பற்றி கேள்விப்பட்டவர்கள் எம்மை நாடி வரும் போது நாம் அவர்களை தேடி சென்று உதவ முடிந்தது.

நாம் உங்களிடம் சந்தா பணம் அறவிட்டு அதை என்ன செய்தோம்? எந்த பாடசாலைக்கு சென்றோம்.? எவ்வகையான சேவைகள் செய்தோம். என்பதனை படம் பிடித்து காட்டும் கட்டாயம் எமக்கு உள்ளது.

எம் மன்றத்தின் முயற்சி நம்மவர் சுமையை குறைப்பதற்காகவே.

மலையகக்கல்வி அபிவிருத்தி மன்றம் மலையகத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதல்ல அது நம்நாட்டிலுள்ள எல்லா பிரதேசங்க -ளுக்கும் உரித்தானதே. எமது சேவை தொடரும்.

நன்றி
வணக்கம்

S. சரவணகுமார்.
நிர்வாகக்குழு
ம.க.அ.ம


# துன்பப் பட்டால் இன்பம் காணலாம்

ஒரு ஊரில் ஒரு கோயில் இருந்தது. கோயிலுக்கு வருகிறவர்கள் படியில் ஏறி கோயிலுக்குள் போனார்கள்.

கோயிலுக்குள் இருந்த சிலைக்கு பூஜை செய்தார்கள், அர்ச்சனை பண்ணினார்கள். சூடம் காட்டினார்கள், பூமாலை சூட்டினார்கள், கும்பிட்டார்கள்.

வாசலில் இருந்த படிக்கல் இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தது. ஒரு நாள் படி சாமி சிலையிடம் கேட்டது நீயும் கல், நானும் கல் எல்லோரும் என்னை ஏறி மிதிக்கிறார்கள் ஆனால் உன்னை வணங்குகிறார்கள். பூமாலை போட்டு பூஜை செய்கின்றார்கள். இது ஏன் ?

ஆக்கம்
T. தனராஜ்




**சாமி சிலை** சொன்னது - ஒரு சிற்பி உளியில் என்னை செதுக்கினான், **சுத்தியலால்** தட்டினான். எல்லாக் கஷ்டத்தையும் தாங்கிக் கொண்டேன். **இப்போது மகிழ்ச்சியாக** இருக்கின்றேன். முதலில் துன்பப் படுபவர்கள் பிறகு இன்பம் அடைவார்கள்.

எந்த வேலையும் முதலில் கஷ்டமாகத் தான் இருக்கும் கஷ்டத்தை தாங்கிக் கொள்ளுங்கள். வேலை முடிந்த பின் மிகவும் மகிழ்ச்சி அடைவீர்கள். இரவு பகலாக படிக்கும் மாணவன் தேர்வில் தேறியதும் எவ்வளவு மகிழ்ச்சி அடைகிறான்.

# இப்படியும் சொல்லலாமே

**நடுத்தர வயது:** ஒருவருக்கு நீளவாட்டத்தில் வளர்ச்சி நின்றுபோய் அகல வாட்டத்தில் வளர்ச்சி ஆரம்பிக்கும் வயது.

**ஓட்டுநர்:** ஒரு வாகனத்தை நன்கு ஓட்டும் அளவுக்கு திறமைசாலி வாகனத்தை சொந்தமாக வாங்காத அளவுக்கு புத்திசாலி.

**மனசாட்சி:** ஒரு காரியத்தை செய்யக்கூடாது என்று எச்சரிக்கும் ஒரு குரல் அதை செய்து முடித்த பிறகு.

**அகங்காரம்:** ஊட்டச்சத்து ஏதும் இல்லாமல், தானாக வளர்ச்சி பெறுவது இது ஒன்றுதான்.

**அனுபவம்:** நம்முடைய கடந்த காலத் தவறுகளுக்கு நாம் கொடுக்கும் பெயர்.

**பெண்கள்:** பொதுவாகச் சொன்னால் பொதுவாக ஏதாவது சொல்லிக் கொண்டே இருப்பார்கள்.

**டிப்ஸ்:** யாரோ ஒருவருக்காக வேலை செய்து கொண்டிருப்பவர்களுக்கு நாம் கொடுக்கும் கூலி

**கொட்டாவி:** திருமணமானவன், எப்போதாவது வாயைத்திறக்க ஒரு வாய்ப்பு.

**பக்கத்துவீட்டார்:** உன்னைப்பற்றி உனக்கே தெரியாத பல விஷயங்களை தெரிந்து வைத்திருப்பவர்கள்.

**புத்திமதி:** வாங்குவதைவிட கொடுப்பது சாலச் சிறந்தது எனப்படும் கொள்கையின் அடிப்படை.

**கடன் கொடுத்தவர்:** கடன் வாங்கியவரை விட அதிக ஞாபகசக்தி உள்ளவர்.

**கடமை:** நாம் மற்றவர்களிடம் எதிர்பார்ப்பது.

**திருமணம்:** ஒவ்வொரு மனிதனும் அவசியம் செய்ய வேண்டிய தவறு.

**அறிவாளி:** சாதாரண விஷயத்தை சாதாரண எளிய மொழியில் தொகுத்து கூறத் தெரியாமல் குழப்புபவர்

**வறுமை:** பக்கத்து வீட்டுக்காரன் புது கார் வாங்கியதால் நமக்குள் ஏற்படும் ஒரு தாழ்வு மனப்பான்மை.

**நல்லவன்:** அவனுக்கு பிடிக்காத கெட்ட பழக்கங்களை விட்டவன்.

**கொட்டாவி:** ஒரு நேர்மையான விமர்சனம்.

*தொகுப்பு*
*T. சத்தியசீலன்*
*மன்ற வெளியுறவு அமைப்பாளர்*

கை கூப்பிய படி
“ கட் அவுட்டுகள் ”
கை காட்டும்
“ போஸ்டர்கள் ”
சிங்காரமாய் சிரிக்கின்ற
கலர் முகங்கள்
தேர்தல் கால
வாக்குறுதிகள்
குருதி சிந்தும்
மோதல்கள்
ஒழிந்துக் கொண்டது
ஜனநாயகம்
இருட்டில் தேடும்
வாக்காளர்
கலர் மாறும்
ஓணான்கள்
ஆளை விழுங்கும்
அடையாளம் தெரியாத
முதலைகள்
பதவி பணத்திற்காய்
மனிதன் இறங்கும்
பதவி பிடித்ததும்
எல்லாம் மறக்கும் - அவர்கள்
புள்ளடிப் போட்டவர்களும்
பொல்லடி பட்டவர்களும்
முகம் தூக்கி அழுகின்றனர்
போட்டியிட்டவர்கள்
கை குலுக்கி சிரிக்கின்றனர்
அடுத்த தேர்தல் வரும் வரை

செ. மோகன்ராஜ்
அளுத்மாவத்தை
கொழும்பு - 15.



# சோக்ரடீஸ் (கி.மு. 469 - 399)

மிகப் பழமையான காலத்திலேயே ஓரளவு நாகரிகத்துடன் விளங்கிய நகரம் ஏதென்ஸ். அந்நகரில் இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு முன் கி.மு 469- ஆம் ஆண்டு ஒரு ஏழைக் குடும்பத்தில் சோக்ரடீஸ் பிறந்தார். அக்காலத்தில் இவரது குடும்பம் தாழ்த்தப்பட்டதாகக் கருதப்பட்டது.

சோக்ரடீஸின் தந்தையார் ஒரு சிற்பக் கலைஞர் இவருடைய தாயார் மருத்துவச்சி. அழகற்ற இக்குழந்தையை மிகுந்த அன்புடன் சீராட்டிப் பாராட்டி வளர்த்தனர். அக்காலத்தில் முறையான கல்விப் பயிற்சிக்கு வழியில்லை என்றாலும், சோக்ரடீஸ் சுயமாகத் தன் அறிவை வளர்த்துக் கொண்டார்.

வாலிபப் பருவமடைந்த சோக்ரடீஸ் தன் குடும்பத்தின் வறுமை நிலையை உணரத் தொடங்கினார். அதுவரை இவர் தமது குடும்ப நிலையைப் பற்றி கவலைப்படாது ஏதென்ஸ் நகரத்தின் இயற்கை அழகில் தமது மனதைப் பறிகொடுத்து,

தன் விருப்பம் போல் சுற்றித் திரிந்தார். அதன் பிறகுதான் தனது சிந்தனைக்குச் சற்று ஓய்வு கொடுத்துவிட்டுத் தனது தந்தையாருக்கு உதவியாகச் சில காலம் சிற்பத் தொழிலில் ஈடுபட்டார். ஆனால் அந்த தொழிலில் போதிய வருமானம் கிடைக்கவில்லை.

அக்காலத்தில் ஏதென்ஸ் நகரில் வாழும் ஒவ்வொரு குடும்பமும் ஒரு பிள்ளையைக் கட்டாயமாக இராணுவ சேவைக்கு அனுப்ப வேண்டும் என்பது சட்டம். எனவே சோக்ரடீஸை அதற்கு அனுப்பி வைத்தனர். குறிப்பிட்ட காலம் வரை இராணுவத்தில் பணியாற்றிவிட்டு வீடு திரும்பினார். அதன் பிறகு குறிப்பிடத்தக்க அளவில் எந்த வேலையிலும் சேரவில்லை.

காலையில் வெளியே புறப்படுவார் எதிரில் சந்திக்கும் நபர்களிடம்ஏதாவது ஒரு கேள்வி கேட்பார். அவர்கள் அதற்கான பதில் தெரியாமல் விழிப்பார்கள். அவர்களிடம் அடுத்தடுத்துக் கேள்விகளை எழுப்பி, அவர்களிடமிருந்து விடையை வரவழைத்து அவர்களிடம்விழிப்புணர்ச்சியும், அறிவு விளக்கமும் இவர் ஏற்படச் செய்வார்.

நகரில் மக்கள் கூடும் இடங்களிலெல்லாம் நின்று கொண்டு உரத்த குரலில் இவர் உரையாற்றுவார். இவருடைய ஒப்பரிய கருத்துக்களைக் கேட்டு இளைஞர்கள் மயங்கி நின்றனர். தொடர்ந்து இளைஞர்களுக்குப் புத்துணர்ச்சியை ஏற்படுத்தி வந்தார். இவருடைய அறிவாற்றலை உணர்ந்த செல்வந்தர்கள் தங்கள் பிள்ளைகளை இவரிடம் கல்வி கற்க அனுப்பி வைத்தனர். ஏராளமான மாணவர்கள் இவரிடம் கல்வி பயின்றனர். அந்த மாணவர்களில் ஒருவர் தான் பின்னாளில் புகழ்பெற்ற விளங்கிய தத்துவ மேதையான பிளாட்டோ, அவர் தனது சிந்தனை சிறந்து விளங்கக் காரணம் சோக்ரடீஸ் தான் என்று தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.



சோக்ரடீஸ்

சோக்ரடீஸின் நாவன்மையும் ஆழ்ந்த சிந்தனையும் மக்களிடையே பெரும் புகழை ஏற்படுத்தி வந்தன. சோக்ரடீஸ் தம் குடும்ப நிலையை மறந்தார். மழை, குளிர், வெப்பம் ஆகியவற்றைத் துச்சமெனக் கருதினார். ஏதென்ஸ் நகரில்வீதிவீதியாகச் சுற்றித் திரிந்துபேசிக்கொண்டே இருந்தார். பணம், புகழுக்கு இவர் விருப்பப்படவில்லை.

உலகில் என்றென்றும் நிலைத்து நின்று அறிவொளி பரப்பும்உயர்ந்தஉண்மைகளை மக்கள் மனதில் பதியச் செய்தார். எளிய நடையில் அனைவருக்கும் புரியும்படியாக அவற்றைஇவர்விளக்கினார்.இவர்பேச்சில்பேருண்மைகளும்தத்துவங்களும்,நகைச்சுவையும்கலந்திருக்கும்.

இறைவனிடத்தில் இவருக்கு நம்பிக்கை உண்டு. ஆனால் கண்மூடித்தனமான வழிபாட்டை இவர் ஏற்கவில்லை. மனிதன் தான் வாழ்நாள் முழுவதும் , நேர்மையாகவும் வாழ வேண்டும் என்றும், பிறருக்கு நன்மை செய்யாதவன் கடவுளை வழிபடுவதால் நன்மை இல்லை என்று வலியுறுத்தி வந்தார்.

சோக்ரடீஸ் மெர்ட்டன் என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். இரு ஆண் குழந்தைகள் பிறந்தன. மெர்ட்டன் மிகவும் அடக்கமும், பண்பும் நிறைந்த பெண், கணவர் எங்கு சுற்றி விட்டு வந்தாலும் தவறாக எண்ணமாட்டார். தன் கணவர் வீதி வீதியாகப் பேசுவது பற்றி எதுவும் கூறமாட்டார். ஏனெனில் தன் கணவரின் சிந்தனையும் பேச்சும் அவரை மிகவும் ஈர்த்தன. கணவர் மீது மாறாத பற்றுக் கொண்டிருந்த மெர்ட்டன்எதிர்பாராதவகையில் திடீரென்று காலமானார். எதற்கும் கவலைப்படாத சோக்ரடீஸுக்குத் தன் மனைவியின் மறைவு மிகுந்த வேதனையைக் கொடுத்தது.

தனது குழந்தைகளைக் கவனித்து வளர்ப்பதற்காக சாந்திபியை இரண்டாம் தாரமாகத் திருமணம் செய்து கொண்டார். இவள் முதல் மனைவிக்கு நேர் எதிரான குணம் கொண்டவள். இவள் தன் கணவரின் போக்கை முற்றிலும் வெறுத்தாள். கணவரின் உயர்ந்த சிந்தனைகளை வெட்டி பேச்சு என்று நினைத்தாள். இவளுக்கும் இரு குழந்தைகள் பிறந்தன.

ஒரு நாள் சோக்ரடீஸ் தன் வீட்டிற்கு முன்னால் நின்றுகொண்டு ஒரு நண்பரிடம் பகுத்தறிவு பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். இவர் பேச ஆரம்பித்துவிட்டால் சுற்றுப்புறச் சூழ்நிலையை முற்றிலும் மறந்து விடுவார். நண்பருடன் இவர் உரையாடும் போது இவரது மனைவி பல முறை அழைத்தும் இவர் காதில் விழவே இல்லை. மீண்டும் சத்தம் போட்டு மனைவி திட்டியும் இவர் பேசுவதை நிறுத்தவே இல்லை. அதனால் ஆத்திரம் அடைந்த இவரது மனைவி ஒரு பாத்திரத்தில் தண்ணீரை கொண்டுவந்து இவர் தலையில் ஊற்றினாள்.

இச்செயலைக் கண்ட சோக்ரடீஸ் தர்ம சங்கடத்திற்கு உள்ளானார். ஆனால் சிறிதும் அதிர்ச்சி அடையாமல் அமைதியாகத் தன் நண்பரிடம், நண்பரே! இவ்வளவு நேரம் மின்னலடித்தது, இடி இடித்தது இப்போது மழை பெய்திருக்கிறது. அவ்வளவு தான் என்று கூறினார்.

இதுபோல் எத்தனையோ பிரச்சினைகள் இவர் வாழ்வில் நடந்துள்ளன. இருப்பினும் நாளாக நாளாக இவரது மனைவியின் குணத்தில் மாற்றம் ஏற்பட்டது.

இளைஞர்களிடம் சிந்தனைக் கருத்துக்களைச் சோக்ரடீஸ் தொடர்ந்து பரப்பி வந்ததால், அவர்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்டால் தாங்கள் தங்கள் விருப்பம் போல் ஆட்சி நடத்த முடியாது என்று ஆட்சியாளர்கள் அஞ்சினர். அவர்கள் சோக்ரடீஸ் மக்களிடம் விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதைத் தடுத்து நிறுத்த முடிவு செய்து இவரை கடுமையாக எச்சரித்தனர். ஆனால் சோக்ரடீஸ் அந்த மிரட்டலுக்கும் அடிபணியாமல் தனது பிரச்சார பணியைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தார்.


சோக்ரடீஸ்

இவர்மீது அரசு அதிகாரிகள் கோபம் எல்லை மீறியது. மக்களிடையே பகுத்தறிவு கொள்கையைப் பரப்பி இறைவன் மீது உள்ள நம்பிக்கையை இழக்கச் செய்கிறார். இளைஞர்களை மூலைச்சலவை செய்து அவர்களின் மனதைக் கெடுக்கிறார். என்ற குற்றச்சாட்டுக்களை சுமத்தி அரசாங்கம் இவரை கைது செய்தது.

அப்போது குடியரசு என்ற பெயரில் எதென்ஸ் நகரில் சர்வாதிகார ஆட்சி நடைபெற்று வந்தது. நீதிமன்றத்தில் நீதியை எதிர்பார்க்க முடியாது என்பதைச் சோக்ரடீஸ் உணர்ந்திருந்தார். அதனால் பொறுமை காட்டினார்.

நீதி மன்றத்தில் இவர் நிறுத்தப்பட்டு, இவர்மீது கடுமையானகுற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.விசாரணையில் சிறிதும் பதற்றமடையாமல் தன் கருத்துக்களை எடுத் வைத்து தன்மீதுசாட்டப்பட்டுள்ளகுற்றச்சாட்டுக்கள் அபாண்டமானவை என்று சோக்ரடீஸ் வாதிட்டார்.

விசாரணை முடிவில் வாக்கெடுப்பு நடைபெற்றது. சோக்ரடீஸ் குற்றவாளியென 281 பேரும், குற்றமற்றவர் என்று 220 பேரும் வாக்களித்தனர். அவர்கள் இவரை குற்றவாளி என முடிவு செய்தனர்.

இறுதியாக ஆட்சியாளர்கள் இனிமேல் சோக்ரடீஸ் மக்கள் மத்தியில் சிந்தனையை தூண்டும் பிரச்சாரம் செய்வதில்லை. என்று உறுதியளித்தால் தண்டனையைக் குறைப்பதாக கூறினார்.

ஆனால் சோக்ரடீஸ் அதனை ஏற்க மறுத்து, ஏதென்ஸ் மக்களின் அறியாமையை அகற்றும் பணியில் தொடர்ந்து ஈடுபடுவேன்.

உண்மையைத் தேடி அலையும் என் மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தவே நான் வாழ்கிறேன். அதிலிருந்து எந்நிலைமை ஏற்பட்டாலும் பின்வாங்க போவதில்லை என்று உறுதியாக கூறினார்.

அதனால் சோக்ரடீஸுக்குத் தண்டனை வழங்குவதென நீதிமன்றம் முடிவு செய்தது. இவரை நாடு கடத்துவது அல்லது அபராதம் விதிப்பது என்றும் இவற்றில் எதை இவர் ஏற்றுக் கொண்டாலும் விடுதலை செய்வது என்று முடிவு செய்தனர். ஆனால் அவற்றை ஏற்க சோக்ரடீஸ் மறுத்துவிட்டார். இதனால் ஆத்திரமடைந்த அரசினர் இவர் அரசாங்கத்தை அவமதிப்பதாக கூறி இவருக்கு மரண தண்டனை விதித்தனர்.



சோக்ரடீஸ்

மதத்தின் பெயரால் மக்களை ஏமாற்றுகிறவர்களை நோக்கி "கடவுள் யார்? என்று கேட்டு மக்களைச் சிந்திக்கத் தூண்டிய முதல்பகுத்தறிவாளர் சோக்ரடீஸ். கடவுளிடம் ஆத்மார்த்த பக்தி கொள்ளாமல் மக்கள் அச்சத்தினாலேயே கண்மூடித்தனமாகப் பக்தி கொள்வதை மாற்ற முயன்றார். மக்களின் சிந்தனை வளர்ச்சி மழுங்கடிக்கப்படுவதை இவர் கடுமையாக எதிர்த்து போராடினார். வெறும் மூட நம்பிக்கையுடன் வாழ்ந்த மனிதனை சிந்திக்கத் தூண்டினார்.

சிந்திப்பதும், சிந்தனையில் தோன்றுவதை எடுத்துக் கூறுவதும் தனி மனிதனின் பிறப்புரிமை. அதனைத் தடுக்க யாருக்குமே உரிமை இல்லை. குடியாட்சி என்ற பெயரால் சமுதாயத்தின் மேல் மட்டத்தில் உள்ளவர்கள் மக்களை அடிமையாக்கிச் சிந்திக்கவிடாமல் செய்வதைச் சகித்துக் கொள்ள முடியாது. ஒழுக்கமற்றவர்கள் ஒழுக்கத்தைப் பற்றி உபதேசிக்கின்றனர். உண்மையான மக்களாட்சி என்பது மனிதனைச் சிந்திக்க வைப்பதே" இதுதான் சோக்ரடீஸின் சித்தாந்தம்.

ஆசைகளுக்கும், துன்பங்களுக்கும் இடையில் சிந்திக்க தவிக்கும் மனிதன் அவற்றிலிருந்து விடுபடும் வழிமுறைகளை உபதேசித்தார்.

தூய மனமுடன் ஒழுக்க சீலர்களாக மக்கள் வாழ முயல வேண்டும் என்று போதித்தார். கட்டுப்பாடற்ற வாழ்க்கை பயனற்றது. என்று பகர்ந்தார்.கொள்கைப்பிடிப்புஇல்லாதவர்கள்நச்சுத்தன்மை உடையவர்கள். கொள்கை , இலட்சியம் இல்லாதவர்கள் வாழ்வில் மேன்மையடைய முடியாது,அத்தகையவர்களால் சமுதாயத்திற்கு எப்பயனும் இல்லை என்றார்.

தத்துவமேதை

தன்னடக்கம், தெளிவான சிந்தனை, நல்லொழுக்கம், கருணை, பணிவு, கட்டுப்பாடு, புலனடக்கம் நேர்மை ஆகிய பண்புகளே உண்மையான ஞானம். அதுவே வாழ்வின் வெற்றிக்கான திறவுகோல் என்று வலியுறுத்தி வந்த சிந்தனை சிற்பி சோக்ரடீஸ் . இவரின் பல தத்துவங்கள் இவரது உண்மையான மாணவராக விளங்கிய பிளாட்டோவின் மூலமே நமக்குக் கிடைத்திருக்கின்றன. அத்துடன் வரலாற்றுப் பேரறிஞர் சென.ஃபோன் அவர்கள் எழுதிய ஆராய்ச்சிக் குறிப்புகளாலும் சோக்ரடீஸின் வாழ்க்கைப் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது.

" அவர் சொன்னார், இவர் சொன்னார் என்று எதையும் சிந்திக்காமல் ஏற்காதே ! ஏன் ? எதற்கு? எப்படி ? என்னும் கேள்விகளை எழுப்பி உண்மையை உணர்நது கொள். உன்னையே நீ எண்ணிப்பார்."என்று மக்களைச் சிந்திக்க வைத்த தத்துவ மேதை சோக்ரடீஸுக்கு எதென்ஸ் நீதிமன்றம் வழங்கிய பரிசு கொடிய விஷம் அருந்தி இறக்க வேண்டும் என்பதே. ஹெமலாக் என்ற கொடிய விஷம்இவருக்குவழங்கப்பட்டது.
அது கேட்டு இவரது மனைவி கதறியழுதார்.

குற்றத்தை ஏற்று விடுதலையாகுமாறு கெஞ்சினாள். சோக்ரடீஸின் நண்பர்களும் ஆதிக்க வெறியர்கள் விதித்த தண்டனையிலிருந்து இவரை விடுவிக்கக் கடுமையான முயற்சியில் இரகசியமாக ஈடுபட்டனர். ஆனால் கடைசி வரையிலும் தலைவணங்க மறுத்து, விஷம் அருந்தித் தன் உயிரை நீத்தார்.

மக்கள் சிந்தனையைத் தூண்டியதற்காக தன் உயிரையே துச்சமென மதித்த சோக்ரடீஸ் உலகம் போற்றும் தத்துவ ஞானியாக அழியாப் புகழில் இன்றும் வாழ்கிறார்.

தொகுப்பு :-
K. சிவசுப்ரமணியம்
உபதலைவர்
ம.க.அ.ம


# Sabaris Print

QUALITY OFFSET PRINTERS





No# 150, Jampettah Street, Colombo-13
Tel: 077 6069878, 077 6754257



# ரஜினி சொன்ன கதை

S. நிர்மல்நாத்
நிர்வாககுழு

நான் நிறைய விஷயங்களை சின்ன குழந்தைங்ககிட்டே இருந்து கத்துக்கிறேன். ஏன் ! பறவைகள், மிருகங்கள் கிட்ட இருந்து கூடகத்துக்கிறேன். சில விஷயங்களில் மனுஷனை விட மிருகங்கள் உயர்ந்து நிற்குது.

ஒரு மனுஷன் இன்னொரு மனுஷனைப் பார்த்து பொறாமைப் படுவான் அவனைப் போல தானும் வசதியாக மாட்டோமான்னு ஏங்குவான். ஆனா மிருகங்கள் அப்படி இல்ல. ஒரு ஆடு, புலியாக மாறனும்னு மனம் புளுங்குதா ? ஒரு மாடு யானையாக மாறனும்னு ஏங்குதா ?

ஆனா அடுத்தவனோடு நம்மை ஒப்பிட்டு நம்ம வாழ்க்கையை வீணாக்கிட்டு இருக்கிறோம். நம்ம எதிர்ப்பார்ப்புப்படி மத்தவங்க நடந்துக்கனும்னு நினைக்கிறோம்.

அப்படி நடக்காதப்போ பிரச்சனை. பூசல் இதெல்லாம் வருது. நிம்மதி போவுது... அப்புறம் வாழ்க்கையே பாரம் தான்.

நம்ம எதிர்பார்ப்புக்குத் தகுந்தாப்போல மத்தவங்க நடந்துக்கணும்னு நினைக்க நமக்கு என்ன உரிமை இருக்கு? நான் எதிர்பார்க்கிற மாதிரி பொண்டாட்டி நடக்கனும் கணவன் விரும்புகிறான்.

நண்பர்கள் கூட தங்களுக்குள்ளே நிறைய எதிர்பார்ப்புக்களை வளர்த்துக்கிறாங்க. இதெல்லாம் வளர்ந்து திடீர்னு ஒருநாள் ஏமாற்றத்துல முடியிறப்போ அந்த உறவே சீர்குலைஞ்சு போகுது. கடைசியில ரெண்டு பக்கத்திலையும் நிம்மதி போயிடுது. இதை யாராச்சும் சிந்திச்சு பார்க்கிறோமா ?

ஒவ்வொருத்தருக்கும் ஒரு தனித்தன்மை இருக்கு. அதை நாம மதிக்க கத்துக்கனும் பொண்டாட்டியோட தனித்தன்மையை கணவன் மதிக்கனும். அப்பத்தான் அன்பு வளரும்.உறவுவிரியும் அதனால் தான் வீட்டில் என் பிள்ளைகளோட தனித்தன்மையில் நான் குறுக்கிடுறதே இல்லை". என்கிறார் ரஜினி.



# மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்திற்கான சந்தா

மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்தில் இதுவரை அங்கத்தவர்களின் எண்ணிக்கை சுமார் 600 ஐ எட்டியுள்ளது. இவ்வளவு அங்கத்தவர்களும் மாதம் 200 ரூபா படி சந்தா செலுத்தினால் 120,000 ஆயிரம் வருமே என்று அனைவரும் நினைக்கலாம். ஆனாலும்,

எங்களுக்கு அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கிறது. ஆனால் சந்தா செலுத்தும் அங்கத்தவர்களின் எண்ணிக்கையில் அரைபங்கினரே ஆர்வத்தில் அங்கத்துவத்தை பெற்றுவிடுகிறார்கள். அவர்களின் இடத்திற்கு எமது சந்தா சேகரிப்பாளரால் சென்று பெற்றுக்கொள்ள முடியாமல் போவதும் சந்தாக்காரர் வேறு முகவரிக்கு மாற்றல் ஆகிச் செல்வதும், அவர்கள் தூர பிரதேசங்களில் இருப்பதாலும் சரியாக பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது.

இதனை சரி செய்யும் முகமாக, எமக்காக வங்கிக் கணக்கு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நேரடியாக கொடுக்க முடியாதவர்கள் வங்கிக் கணக்கில் வைப்பிடலாம்.

**Peoples Bank**
**Malayaga Kalvi Abiviruthi Mandram**
**A/C . 27710010000 2406**
**Sea Street, Branch**

பொருளாளர்
P. நாகதாஸ்
ம.க.அ.ம

## பேச்சு:-



பண்புப் பேச்சு பயன் தரும் .

பயன் தராத பேச்சினால் எவ்வித நன்மையும் இல்லை.

நீங்கள் பேசிய ஒவ்வொரு பேச்சுக்கும் கேட்ட கேள்விக்கும் கணக்கு உண்டு என்கிறார் ஜேம்ஸ் அலன். கேட்பவரை பேச விடாமல் தாம் மட்டும் வளவளவென பேசக்கூடாது. அடுத்தவருடைய கருத்தையும் கூற வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

**அதுதான் பண்புப் பேச்சு:-**

மெதுவாக பேசுங்கள்: மென்மையான பேச்சு நன்மை தரும்.

தெளிவாக பேசுங்கள் : அது உங்களுக்கு சிறப்பைத் தேடித் தரும்.

அன்பாகப் பேசுங்கள் : அழியாப்புகழை அள்ளித்தரும் .

மரியாதை கொடுத்துப் பேசுங்கள் : உங்களுக்கு மரியாதை கிடைக்கும்.

அடுத்தவர் பேச வாய்ப்பளித்துப் பேசுங்கள்: உங்கள் மதிப்பு ஒருபடி உயரும்.

இனிமையாக பேசுங்கள்: எல்லோருடைய மனதிலும் இடம் பெறலாம்.

கனிவாகப் பேசுங்கள்: காரியத்தை சாதிக்கலாம்.

நல்ல உச்சரிப்புடன் பேசுங்கள் : புகழ் பெறலாம்.

சிறிதே பேசுங்கள் அதனை சிறப்பாக பேசுங்கள்.

மற்றவர் பேசும் போது கவனமாக கேளுங்கள்.

மௌனமாக இருங்கள் மகான் ஆகலாம்.

ஆக்கம் :-
A. ஜோசப்
திட்டமிடல் முகாமையாளர்
ம.க.அ.ம

மாண்டுப்போன இதயங்களின்
மத்தியில் மீண்டும் ஓர் கவிக்குறள்
மலையகம் என்ற பெயரில்
எங்கள் வேட்கை வெளிவரும் காலமிது
கைக்கோர்த்து விட்டோம் மலையக கல்வி அபிவிருத்தியின்
நோக்கில்
முகிலோடு மருவிய மலை முகட்டில்
உயர்கலைகளை பயில செய்ய
முன்னெழுத்து பயணமிது
இரத்தம் சிந்தா புரட்சியிது

இருண்டு கிடக்கும் இதயத்தின்
விடிவிற்காகவும்
மலையக குலத்தின் கல்விக் கண்ணீரை
துடைப்பதற்காகவும் மீண்டெழுந்து விட்டோம்
பச்சையம் இல்லா தாவரமும்
ஒளிச்சேர்க்கை செய்யும் - எங்கள்
உத்தியில்

பகுத்தறிவு இருந்தும்
பாலாய் ஓடும் கல்வி
அலைகளின் மொழியா இல்லை
இதற்கும் அகராதி தேடப் போகின்றோம்
எங்கள் இரத்தக் கையெழுத்தில்
எழுத்துப் பிழைகளில்லை
சிந்தித்துவிட்டோம் நாளைய
தலைமுறைக்காய்
பொருளாதார கிடங்கில் - எம்
செல்வங்களை மீட்டெடுக்கும்
பயணமிது


முள்ளை முள்ளால் எடுப்பது
முன்னோர் வழிதான்
கண்ணுக்குள் விழுந்த
முள்ளுக்கு பழைய தத்துவம்
பயன்படுமா ?
நிகழ்காலத்தீயில் எம் நேசம்
தேன் சொரியும் போது
நிச்சயமாக உச்சம் கிட்டுவோம்

வாழையடி வாழையாய்
இதயத்தில் படிந்த
மலையக துடிப்பு எம்மில்
பதுங்கி விட்டன
எம் மக்கள் கவிநயம் கொட்ட
எம் மலையக கல்வி அபிவிருத்தி மன்ற
நோக்கமே முதற்படி

ஆகாயத்தில் வானவில்லுக்குள்
படிந்த வர்ணம் காய்ந்து
விட்டதா என்று தொட்டுப் பார்க்க
எம் விரல் நீள்வதில்லை
எங்கள் பணிக்கு முட்டுபோட
ஆளுமில்லை
மலையக கல்வி என்ற தொனியில்
துடைக்க துணிந்தோம் எம்
மக்கள் துயரை

மலையகமே ! எம் மன்றத்தில்
உனக்கும் அங்கத்துவம் தந்துவிட்டோம்
ஊக்கமளிப்பாய் - எங்கள் மலையக கல்வியின் உயர்விக்கு கரம்
நீட்டுங்கள் அறிவொளி பரவட்டும்

ஆக்கம் :–
K. ஸ்ரீகாந்த்
(நிர்வாக குழு)
ம.க.அ.ம


With Best Compliments Forom:
K.Murali
Miracle
Fashion Jewels
Dealers in 1G. Gold Jewellery, Imitation Jewellery, Fancy Items, Cosmetic etc.
HOT
391, Galle Road, Colombo-06
Tel: 0112 363761, 075 7144133

இன்று மலையகக் கல்வி பற்றி பல்வேறு வகையிலும் பேசுகிறார்கள். பத்திரிகைகளிலும் எழுதப்படுகின்றன. மலையகக்கல்வி ஏன் பின் தங்கியிருக்கிறது?. என்று ஆராய்ந்தால் அதற்கு பல காரணங்கள் உண்டு. அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம்.

முதலாவதாக இந்த மக்கள் கல்வியின் தேவையை உணர்வதில்லை.
அவர்களது தொழிலுக்கு அது அவசியமும் அல்ல.

இரண்டாவது பொருளாதாரப் பிரச்சனை.
மூன்றாவது பாடசாலை வளங்கள் பற்றாக்குறை

இப்போது நாம் முதலாவது விடயத்தை கவனிப்போம். மலையக மக்களின் தொழிலுக்கு உதாரணம் கொழுந்து பறிக்க , உரம் போட, மட்டம் வெட்ட, கவாத்து வெட்ட அவர்களுக்கு கல்வி அவசியம் இல்லை . படிப்பில்லாமலே தொழில் கைவசம் இருக்கிறது. தோட்டத்தில் பதிய கல்வித் தகைமை கேட்பதில்லை. மற்றது அங்குள்ள இளைஞர், யுவதிகள் நகர்புறங்களுக்குச் சென்றாலும் கல்விசார் தொழிலுக்குச் செல்வதில்லை.

இளைஞர்கள் ஓட்டல்களிலும், புடவைக்கடைகளிலும்,நகைக்கடைகளிலும் , சிலர் வீடுகளிலும் வேலை செய்கிறார்கள். இங்கெல்லாம் இவர்களுக்கு கல்வி அவசிய மற்றதாகிறது. யுவதிகள் அநேகர் புடவை தொழிற்சாலைகளிலும் அல்லது வீட்டு வேலை, இப்படியான தொழிலுக்குச் செல்கிறார்கள். இதற்கெல்லாம் அங்கே கல்வி அவசியப்ப படுவதில்லை.

மற்றது மலையக இளைஞர், யுவதிகள் வெளிநாடு செல்கிறார்கள். இங்கும் பெண்கள் அநேகர் வீட்டு வேலைக்கே செல்கிறார்கள். பெயர் கூட எழுதத் தெரியாத பெண்களும் வீட்டு வேலைக்கு சென்று வருகிறார்கள். ஆனால் அநேகர் சுத்திகரிப்பு ( கிளினிங் ) வேலைக்கே செல்கிறார்கள்.

எனவே இவர்களின் தொழிலுக்கு இவர்களது வருவாய்க்கு கல்வி அவசியமற்றதாகி விடுகிறது. எனவே இவர்கள் கல்வியின் தேவையைப்பற்றி உணர்வதில்லை.

இரண்டாவது பொருளாதாரம் இந்த மக்களுக்கு நிரந்தர வருமானம் இல்லை. நாட்கூலி, சம்பளம், இவர்களது வாழ்க்கைச் செலவுக்கே பற்றாக்குறையாயிருக்கிறது. உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைப்பதில்லை. அநேகமாக 90 வீதமானோர் தோட்டத் தொழிலாளர்கள்.

திருமணம், ருதுசாந்தி, மரண வீடு, கோயில்திருவிழா, உறவினர் வீடுகளில் நடக்கும் நிகழ்ச்சிகள் இப்படிக்கலந்து கொள்வதாலும் நோய்வாய்ப்பட்டு வீட்டில் இருப்பதாலும் இவர்களது மாதாந்த வருமானம் குறைவாகவே கிடைக்கிறது. எனவே இவர்களின் நாட்சம்பளம் 280/= கிடைக்கிறது. எனவே அடிப்படைத் தேவைகளுக்கு பற்றாக்குறை நிலவுகின்ற போது கல்விக்கு எப்படிச் செலவளிப்பது ?

மற்றது சிரமப்பட்டு படித்த பிள்ளைகளுக்கே அரச உத்தியோகம் இல்லாமல் இருப்பதால் இவர்களுக்கு கல்வியின்பால் மேலும் சலிப்பு உண்டாகிறது.

மூன்றாவது பாடசாலை வளங்கள் அநேகமான மலையகம்சார் நகர்புற பாடசாலைகளில் போதிய விஞ்ஞான ஆசிரியர்கள் இல்லை அநேக பாடசாலைகளில் விளையாட்டுத்திடல்கள் கூட இல்லை, போதிய கட்டிட வசதி இல்லை இப்படிப்பல்வேறு பற்றாக்குறை நிலவுகின்ற படியால் மலையககல்வியை செவ்வனே முன்னெடுத்துச் செல்ல முடிவதில்லை. தோட்டப்பாடசாலைகளில் ஆங்கிலம், கணிதம், என்பன ஆரம்பத்தில் முறையாகப் போதிப்பதில்லை. படிப்பிக்க ஆசிரியர்களும் இல்லை. எனவே தோட்டத்தில் படிப்பை முடித்து நகர்புற பாடசாலை செல்லும் மாணவன் தகுந்த படிப்பு பயிற்சி என்பன இல்லாமையால் நகர்ப்புற மாணவர்களோடு போட்டிபோட முடியாதவாறு தவிக்கின்றான். எனவே இம்மாணவன் O/L எழுதும் போது குறைந்த புள்ளிகளைப்பெற்று படிப்பை இடையில் நிறுத்திவிட்டு தொழிலுக்கு சென்று விடுகிறான். எனவே மலையகக்கல்வி உயரவேண்டுமானால் கல்விமான்கள், அரசியல் வாதிகள், மற்றும் தொழிற்ச்சங்க வாதிகள் . இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் அம்மக்களின் வேதனம் உயரவேண்டும். அந்த மக்களின் கல்வியைப் பற்றி உணர வேண்டும்.

மலையக படித்த இளைஞர், யுவதிகளுக்கு அரச உத்தியோகம் கிடைக்க வேண்டும். படித்தால் தான் நல்ல தொழில் கிடைக்கும் என்ற நிலை உருவாக வேண்டும்.

K. திருலிங்கசாமி
ம.க.அ. மன்று
நிதி சேகரிப்பாளர்

# தத்துவப் பாடல்

| பாடல் வரிகள் | படம் | பாடியவர் |
|---|---|---|
| சினேகன் | பாண்டவர் பூமி | பரத்வாஜ் |

ஆ : அவரவர் வாழ்க்கையில் ஆயிரம் ஆயிரம் மாற்றங்கள்
அந்த நினைவுகள் நெஞ்சினில் திரும்பிட திரும்பி ஏக்கங்கள்
அது ஒரு அழகிய நிலாக்காலம்
கனவினில் தினம் தினம் உலாப் போகும்.....
நிலவுகள் சேர்ந்து பூமியில் வாழ்ந்ததே
அது ஒரு பொற்காலம் (அவரவர்)

ஆ. காற்றும் கூட, எங்களுடன் இரவினில் தூங்க இடம் கேட்கும்
மழைத்துளி கூட என் தாயின் மடியினில் தவழ தினம் ஏங்கும்
நத்தைக் கூட்டின் நீர் போதும் எங்களின் தாகம் தீர்த்துக் கொள்வோம்
கத்தும் கடலும் கை தட்ட கவிதைகள் போலே வாழ்ந்து வந்தோம்

குழு தாயின் மடியில் தினம் இறந்து
காலையில் மீண்டும் உயிர் பெறுவோம்
கனவினை காலையில் மொழி பெயர்த்து
சொல்லி சொல்லி சுகமாய் தினம் சிரிப்போம்

ஆ. ஐந்தெழுத்து புதுமொழியை அறிய வைத்தாள் என் அன்னை
அண்ணன் தங்கை ஐவருமே நேசம் கொண்டோம். தமிழ் மண்ணை
நிலவுகள் சேர்ந்து பூமியில் வாழ்ந்ததே
அது ஒரு பொற்காலம் (அவரவர்)

ஆ. அன்னை ஊட்டிய பிடிசோற்றில் ஆயுள் முழுக்க பசி மறந்தோம்
ஒற்றைக் கண்ணில் அடிபட்டால்
பத்துக்கண்ணிலும் வலி கண்டோம்
பள்ளிக்கூடம் தந்ததில்லை பாசம் என்னும் நூல் ஒன்றை
வேதங்கள் நான்கும் சொன்னதில்லை
எங்கள் கதை போல் வேறொன்றை

குழு. கண்களும் நீர்த்துளி கண்டதில்லை
அழுதிட அவைகளும் பழகவில்லை
கறுப்பா சிவப்பா தெரியவில்லை
கவலைகள் இதுவரை முளைத்ததில்லை

ஆ. சேகரித்து வைப்பதற்கு தேவை என்று எதுவுமில்லை
இறைவனுக்கும் எங்களுக்கும் இடைவெளிகள் இருந்ததில்லை
நிலவுகள் சேர்ந்து பூமியில் வாழ்ந்ததே
அது ஒரு பொற்காலம் (அவரவர்)




அம்மா.... அம்மா ..... என்று கூப்பிட்டவாறு ஓடி வந்தான் ஏழு வயது மகன் விக்னேஸ் டீ.வி பார்த்துக் கொண்டிருந்த தாய் திரும்பி பார்த்தார்.

" என்னடா கண்ணா ? " வாஞ்சையுடன் மகன் தலையை தடவினாள், அம்மா. "நான் பனிய லயத்து சுதாவுடன் விளையாட போகட்டுமா ?. என்று கேட்டான் விக்னேஸ்.

"திக் என்றது அம்மாவுக்கு. விக்னேசின் அப்பா தோட்டத்தில் கிளார்க் வேலை செய்பவர். இவர்களின் வீடு தனி கோட்டஸ். அதற்கு கீழே பழைய லயம் ஒன்று இருந்தது. அதை பனிய லயம் என்று அழைப்பார்கள்.

அந்த லயத்தில் தோட்ட வேலை செய்பவரின் மகன் தான் சுதா. அந்த அழுக்கு பையனுடன் என் பிள்ளை விளையாடுவதா? யோசித்த தாய் வேண்டாம் நீ அவனோடு விளையாட வேண்டாம் என்று அவசர மறுப்பை வெளியிட்டாள். விக்னேசின் முகம் " புஸ் என சுருங்கிப் போனது.

"ஏம்மா" ஏமாற்றத்துடன் கேட்டான். " அவன் என்ன பையன் பள்ளிக்கூடத்திற்கே போகாதவன் அவனோடு சேர்ந்தால் நீயும் கெட்டுப் போயிடுவ. அப்படியா ? அப்பாவித்தனமாய் கேட்டான் விக்னேஸ். ஆமாண்டா ராஜா ! நீ எப்போதும் நல்ல பையன்களோட தான் சேர்ந்து விளையாடனும். உன் வகுப்பில உன்னைவிட நன்றாகப் படிக்கிறவங்களோடு நீ சேரு அவங்களோடு படி அவங்களோடு விளையாடு !

ஏம்மா அப்படி?
"ஏன்னா! நீ நல்லவங்களோடு சேர்ந்திருந்தா உன்னோட பழக்க வழக்கங்களும் இன்னும் நன்றாக வளரும். அறிவும், திறமையும் பெருகும்.

தாய் சொன்ன அறிவுரையைக் கூர்ந்து கேட்டுக்கொண்டிருந்து விக்னேஸ், நிதானமாக கேட்டான். - " ஏம்மா நான் நல்லவனா? கெட்டவனா? அடடே ...... நீ ரொம்ப நல்ல பையனாச்சே. இதில் என்ன சந்தேகம் ?

அப்ப எங்கூட அந்த சுதா சேர்ந்தா அவனும் நல்ல பையனா மாறிடுவான் தானே ?

சரீர் என்றது தாய்க்கு, அந்த சிறுவனின் நெருப்பு வார்த்தை நெஞ்சில் முள்ளாய் குத்தியது. இத்தனை நாளும், பூவோடு சேர்ந்த நாரும் மணம்பெறும் " என்று தான் எல்லோரையும் போல் அவள் எண்ணியிருந்தாள். ஆனால், நாரோடு பூ சேர்ந்தாலும் நார் மணக்கத்தான் செய்யும் என்பதை அந்த பிஞ்சு மணம் உணர்த்தி விட்டதை எண்ணி வியந்து நின்றாள் தாய்.

முற்றும்

ஆக்கம்
T. தனராஜ்
தலைவர்
ம.க.அ.ம

எமது அடுத்த வெளியீட்டில் உங்கள் கேள்விகளுக்கு சிற்பி பதிலளிக்க இருக்கிறார். உங்கள் கேள்விகள் மன்றம், அரசியல் , சமூகம், பொதுஅறிவு, சினிமா, போன்ற கேள்விகளாக எங்களுக்கு எழுதி அனுப்பலாம்.

முகவரி: -

"வினவுங்கள் விடைகிடைக்கும் " பகுதியில் நீங்களும் வினா தொடுங்கள் விடை கிடைக்கும்.

சிற்பி
வானவில்
இல. 157/3, செட்டியார் தெரு,
கொழும்பு - 11.

## வானவில் குறுக்கெழுத்துப் போட்டி இல. 01

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | 6 |
| 7 | | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | | 17 | |
| | 20 | 21 | 22 | 23 | |
| 25 | 26 | 27 | | | 30 |
| 31 | 32 | | 34 | 35 | 36 |

## இடமிருந்து வலம்

01 வானில் தோன்றும் இதனை ரசிக்காதவர்கள் இல்லை

09 விஜய் நடித்த திரைப்படம் (குழம்பியுள்ளது.)

13 ஏற்றிய விளக்கு இது விட்டு எறிய வேண்டும் என்பர் (குழம்பியுள்ளது.)

20 நாம் செய்யும் ஒவ்வொரு கடமையிலும் இது அவசியம் (குழம்பியுள்ளது)

25 காதலித்தால் இதுவும் வரும் என்பர் (குழம்பியுள்ளது. )

31 இது இல்லாமல் கையடக்க தொலைபேசியில் பேச முடியாது

34 கண்ணகியின் சாபதத்தால் எறிந்தது இந்த நகரம்.

## மேலிருந்து கீழ்

01 இது இல்லாமல் பரம்பரை இல்லை

03 நகைச்சுவையாளரை இப்படியும் அழைப்பர்

04 விக்ரம் நடித்த தமிழ் திரைப்படம் (தலைகீழாகவுள்ளது

06 மாலுமிகளின் கையில் இருப்பது இதில் மீன் அகப்படும் (தலைகீழாகவுள்ளது)

11 இது இல்லாதவர்களுக்கு இவ்வுலகில் மதிப்பேது

14 நல்ல மனிதர்களுக்கு இது இருக்க கூடாது என்பர். (குழம்பியுள்ளது)

25 பிணம் என்ற சொல்லின் ஒத்த பதம்

30 இப்போதெல்லாம் இளையவர்களுக்கும் இது ஒரு பிரச்சனை

# போட்டி நியந்தனைகள்

01. மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்தினர் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பங்குபற்ற முடியாது.
02. ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைவரின் குலுக்கல் முறையில்வெற்றியாளர் தேர்ந்தெடுக்கப்படுவார்.
03. நவம்பர் 31 க்குள் விடைகள் வந்து சேர வேண்டும்.
04. இதில் வெற்றிபெறுபவர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.
05. அனுப்ப வேண்டிய முகவரி :-

வானவில் குறுக்கெழுத்துப் போட்டி
இல. 01 ( ம.க.அ.ம)
இல. 157/2, செட்டியார் தெரு, கொழும்பு - 11.

ஆக்கம்:–
எல். பி. போல்
ம.க.அ.ம

# மலையக கல்வி அபிவிருத்தி மன்றம் இதுவரை .......

மலையக கல்வி அபிவிருத்தி மன்றம் ஆரம்பித்து கடந்த நான்கு வருடங்களில் நல்ல பல சேவைகளை செய்துள்ளது. அவற்றுள் மலையக பகுதிகளில் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகி மிகவும் வறிய மாணவர்களை இனங்கண்டுமாதாந்த புலமைப்பரிசில் வழங்கி வருவதோடு மிகவும் பின் தங்கிய பாடசாலைகளை தெரிவுசெய்து அப்பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், புத்தகங்கள் பாதணிகள் என்பன வழங்கியுள்ளது.

மன்றம் இதுவரை செய்த செயல் திட்டத்தில் மிகவும் முக்கியமாக ஐந்தாம் ஆண்டு மாணவர்களுக்கு 2009ம் ஆண்டு சுமார் பத்தாயிரம் வினாப்பத்திரங்களை அச்சிட்டு ஏராளமான மலையக பாடசாலைகளுக்கு வழங்கியதோடு நாவலப்பிட்டி கதிரேசன் வித்தியாலயத்தில் 500 வரையிலான மாணவர்களுக்கு கருத்தரங்கை மன்ற அங்கத்தவர்கள் நேரில் சென்று நடாத்தியமை, குறிப்பிடத்தக்கது. மேலும் சூரியகாந்தி பத்திரிகையுடன் இணைந்து க.பொ. த. சா. தர மாணவர்களுக்கு கொழும்பில் தகுதி வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்டு வினாப்பத்திரம் தயாரிக்கப்பட்டு நாடு பூராகவும் விநியோகித்தமை, தலை நகரில் பல புத்தக வெளியீடுகளுக்கு அனுசரனை வழங்கி எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தியமை. இளைஞர்களை ஒன்றினைக்கும் முகமாக பல கிரிக்கட் போட்டிகளை நடாத்தியது முதன் முதலாக செட்டியார் தெருவில் தொழிலாளர் தினமானமேதினமன்று மேதின விளையாட்டு விழாவினை வெற்றிகரமாக நடாத்தியது. மலையகத்திலிருந்து சர்வதேச மட்டத்தில் தெரிவாகி வெற்றி பெற்ற மாணவர்களுக்கு உதவி தொகை மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கியது.

விஞ்ஞான ஆய்வின் மூலமாக சாதனைப்படைத்து வெளிநாடு சென்ற மாணவர்கள் பலருக்கு உதவி தொகை வழங்கி ஊக்கப்படுத்தியது மற்றும் மன்ற போஷகர்களுடன் இணைந்து இவ்வருடம் நடந்த ஆடிவேல் விழாவில். விழா சிறப்பாக நடைபெற சகல வழிகளிலும் உதவி செய்து இதுபோல் ஆடிவேல் விழா சிறப்பாக நடைபெற மன்றத்தினரும் இயன்ற உதவிகளை வழங்கியிருந்தனர்.

A.S. ஞானம்
செயலாளர்
மலையக கல்வி
அபிவிருத்தி மன்றம்

# மலையக கல்வி அபிவிருத்தி மன்றம் இனி .......

எதிர்வரும் காலங்களில் மலையக கல்வி அபிவிருத்தி மன்றம். இதைவிட சிறப்பாக இயங்க விருக்கின்றது. மன்ற போஷகர்களின் உதவியுடன் இன்னும் பல நல்ல உள்ளம் கொண்ட அன்பர்களையும் இணைத்து அவர்களின் உதவியுடன் புதிதாக விண்ணப்பித்துள்ள பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களின் விண்ணப்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மிகவும் வறுமையில் உள்ள சுமார் **75 மாணவர்களுக்கு** புலமை பரிசில்களை வழங்கவுள்ளோம். அத்தோடு எராளமான கஷ்ட பிரதேச பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்க உள்ளோம்.எங்களுக்குகிடைக்கப் பெற்றுள்ள. பாடசாலைகளுக்கான விண்ணப்பங்களின் வரிசை கிரமத்தில் பாடசாலை உபகரணங்கள் வழங்க உள்ளோம்.

க. பொ. த. சாதாரண தரம் - உயர் தரம் புலமைப்பரிசில் ஆகியவற்றுக்கு சிறந்த முறையில் கருத்தரங்குகள் நடாத்த ஏற்பாடு செய்துள்ளோம்.

ஆரம்பபாடசாலை இல்லாத மலையக தோட்டப்பகுதிகளில் ஆரம்ப பாடசாலைகளை உருவாக்குதல், தொண்டர் ஆசிரியர்களுக்காக உதவி தொகை வழங்குதல் நம் சமூகத்தை உயர்த்தும் எந்த ஒரு இளைஞர் யுவதிகளுடனும் இணைந்து சிறந்த செயல் திட்டங்களுக்கு மலையக கல்வி அபிவிருத்தி மன்றம் துணையாக இருக்கும் இந்த சிறந்த சமூகத் தொண்டுகளுக்கு அனைத்து தரப்பினரும் எம்முடன் இணைந்து கல்வி கண் திறக்கும் இப்பாசறையில் இணைந்து எம்மவர் கல்வியை உயர்த்திடுவோம்.

நன்றி

" எம்மவர் கல்வி உயர்ந்திட
எம்முடன் இணைவீர் "

A.S. ஞானம்
செயலாளர்
மலையக கல்வி
அபிவிருத்தி மன்றம்

# கல்விக் கண் திறப்போம்

# அறிவொளி பரவட்டும்

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

## எம்மவர்
## கல்வி உயர்ந்திட
## எம்முடன் இணைவீர்

**S. ANTHONY JEEVA**
JUSTICE OF THE PEACE
FOR THE WHOLE ISLAND
57, MAHINDA PLACE,
COLOMBO - 06.

# Kumari Beauty Centre



## Beauty Care

Threading
Waxing, Herbal Facial
Gold, Silver, Pearl Facial
Clean up Non Surgical
Lazer Treatments
For Hair, Sclup
Scar, Pimple Marks
Skin Wrinkles
Removal of
Unwanted Hair
Permanent
Eye Brows
Bridal Dressing
Flower
Dip. Advance
Dip. Courses

## Hair Care

Hair Cutting
Hair Colouring
Re-Bonding
Straightening
Protein Treatment's
Scalp,
Hair Treatments's
Coloured
Dry Hair Treatments's
Head Massages & other in
Salon Hair Treatments
By Loreal
Professional Products

**45/E, Kotahena Street, Colombo-13.**
**0773 284820, 075- 0212161**

With Best Compliments From:

# WISTHARA

**Wholesale Dealers in Textiles, Cosmetics & Perfumes**

**Specialist in Chilren's Wear**




**No. 92/21, Kiddis Plaza,**
**(Abdul Rahims Building),**
**Keyzer Street, colombo- 11.**
**Tel: 011- 4602415**